# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 1 | ஞாயிறு 5-3-39 வெகுதான்யஹு மாசிமீ 22உ | முத்து 23 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

விஷயம் பக்கம்

1. ஸ்ரீ. போஸின் கடமை ... 626
2. குறிப்பு ... 628
3. போகிற போக்கில் ... 630
4. வார நடப்பு ... 632
5. சில கேள்விகள்
(ஸ்ரீ. பி. எஸ். சேஷாத்திரி ஐயங்கார்) ... 633
6. மிருக சிகிச்சை
(ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி) ... 634
7. சத்தியப் போர்
(சக்திதாஸன்) ... 635
8. ஸ்ரீமான் ஏ. நாராயணன்
("சிட்டி") ... 636
9. சிபார்சுச் சக்கரம்
(ஸ்ரீ. ஸு. சேதுராமன்) ... 637
10. மாறுதல்
(ஸ்ரீ. ஆர். ஷண்முக சுந்தரம்) ... 639
11. இல்லொளி
("துகப்ரியை") ... 642
12. சுகாதாரம் ... 647
13. சிறுவர் பகுதி ... 648
14. புத்தக விமர்சனம் ... 650
15. வலை வீச்சு ... 652

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# ஸ்ரீ போஸின் கடமை

ஸ்ரீ போஸின் தேர்தல் நடந்து கொஞ்ச காலமாகி விட்டபடியாலும், சில விஷமிகள் நடந்தவற்றைத் திரித்துக் கூறுவதாலும் நிலைமை கொஞ்சம் குழப்பம் அடைந்துவிட்டது. பொது மக்களிடையே "பாவம், போஸை இவர்கள்தான் என்ன பாடுபடுத்துகிறார்கள்! தேர்தலில் வெற்றி பெற்றதும் போதும், இப்பொழுது அவர் படுகிற பாடும் போதும். அத்துடன் சீக்கு வேறு இப்பொழுது அவரைச் சீரழிக்க வேண்டும்?" என்று அவரிடம் அனுதாபம் ஏற்படுகிறது.

ஸ்ரீ போஸுக்கு, அவர் இருக்கும் நிலைமையில், எல்லோரும் அனுதாபம் காட்ட வேண்டியது மிகவும் பொருத்தம் தான்; அதற்காக நடந்தவற்றை மறந்துவிடக் கூடாது. டாக்டர் பட்டாபிக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்று ஸ்ரீ போஸ் போட்டிக்கு நின்றவுடன் சர்தார் முதலியவர்கள், காந்திஜியின் அனுமதியின்பேரில், ஸ்ரீ போஸை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி கேட்டு பட்டாபியைப் பகிரங்கமாக ஆதரித்தார்கள். ஸ்ரீ போஸ் இஷ்டப்படவில்லை. போட்டி போட்டார். தேர்தலுக்கு முதல் நாள்கூட காந்திஜி போஸுக்குத் தந்தி அடித்தார். அப்பொழுதும் அவர் விடவில்லை. பட்டாபியை ஆதரித்தவர்களைப் பிற்போக்காளர்கள் என்றும் சமஷ்டி விஷயமாக பிரிட்டிஷ் சர்க்காருடன் சமரஸம் பேசும் மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்றும் சமஷ்டி மந்திரி சபை ஜாப்தாகூடத் தயாரித்து விட்டார்கள் என்றும் அவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினார் தனது கோபத்தில். காங்கிரஸ் முன்னேற்ற திட்ட வேலையும் சட்டசபைத் திட்டமும் மிகவும் தாமதமாக நடக்கிறதென்றும், தான் திட்டத்தைமாற்றி புது முறையில் தீவிரமாக நடவடிக்கை நடத்தப் போவதாகவும், அப்படி நடத்துவதற்காகத்தான் தான் தேர்தலில் நிற்பதாகவும் போர் முரசு கொட்டினார்.

நாம் முன்பே ஆராய்ச்சி செய்திருக்கிறபடி பல காரணங்களால் ஸ்ரீ போஸ் வெற்றி பெற்றார். அவரைத் தேர்தலுக்கு நிற்க வேண்டாமென்று கேட்டுக்கொண்ட காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் எல்லோரும் ராஜினாமாச் செய்து விட்டார்கள். ஸ்ரீ போஸ் அவர்களுடைய நடத்தையை அவ்வளவு கேவலமாகக் கண்டித்த பிறகும், ஸ்ரீ போஸின் தலைமை நாட்டிற்கு இப்பொழுது பொருத்தமல்ல என்று அவர்கள் அபிப்பிராயம் கொண்ட பிறகும் அவர்கள் எப்படி அவருடன் ஒத்துழைக்க முடியும்?

தேர்தல் சமயத்தில் அவர் வானளாவப் பேசிய தீவிர திட்டத்தின் மூன்று அம்சங்கள் ஸ்ரீசரத் சந்திர போஸால் மூன்று தீர்மானங்களாக திரிபுரியில் பிரேரேபிக்கப்படப் போகின்றன. சமஷ்டி எதிர்ப்பு, சமஸ்தானங்களில் காங்கிரஸ் தலையீடு, சத்தியாக்கிரகம் ஏற்பட்டால் போர் புரிய ஒரு தேசத்தொண்டர்கள் படை அமைப்பு— இந்த மூன்றுதான் ஸ்ரீ போஸின் புது திட்டம். இதில் எது புதியது, எது தீவிரம்?

சமஷ்டி எதிர்ப்பு விஷயத்தில் நாட்டில் தீவிரக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுவது சுத்தப் பிசகு. காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் அது சம்பந்தமாக சமரஸம் செய்து விடுவார்கள் என்றோ மந்திரி சபை திட்டம் போட்டு விட்டார்கள் என்று சொல்லுவதோ சுத்த அபாண்டமாகும். அதை அவர் நிரூபிக்கவும் முயலவில்லை. சமஸ்தான விஷயங்களில் ஸ்ரீ போஸ் திட்டம் போடுவதற்கு முன்பே காந்திஜி காரியம் ஆரம்பித்து விட்டார். ஸ்ரீ போஸின் திட்டப்படி காங்கிரஸ் அக்கிராஸனர் சமஸ்தானப் போரை நடத்தும்படியாக காந்திஜியைக் கேட்டுக்

கொள்ளுவதாம்! எப்படி இருக்கிறது? வானை வில்லாக வளைக்கிறேன் என்று ஒருவர் பேசவேண்டும், காரியத்தில் வரும் போது மற்றொருவர் செய்யவேண்டும்! தொண்டர் படை விஷயம் ஒன்றும் புதிதுமல்ல; விசேஷமுமல்ல.

மேலும், பார்லிமெண்டரி வேலையில் ஒரு மாறுதலும் இருக்காது, காங்கிரஸ் வேலை பூராவும் முன்போலத்தான் நடக்கும் என்று முன்னுக்குப் பின் முரணுகை இப்பொழுது வாக்குறுதிகள் கிளம்புகின்றன. ஏன்? ஸ்ரீ போஸின் தலைமையின் கீழ் தீவிர வாதிகள் அட்டகாசம் அதிகமாகி நாட்டில் குழப்பம் வந்து விடுமோ என்று மக்கள் பீதி அடையக்கூடாதென்பதற்காக!

தேர்தல் காலத்தில் தான் செய்த வாக்குறுதியின்படி ஸ்ரீ போஸ் யாதொரு புது திட்டமும் போட்டு தேசத்திற்கு அளிக்கவில்லை என்பது நமது அபிப்பிராயம்; திரிபுரியில் தலைவர் தனியாக யாதொரு தீர்மானமும் கொண்டு வரப்போவதில்லை என்பதும் நிச்சயமாகி விட்டது. ஸ்ரீ சரத்சந்திரரின் தீர்மானங்கள்தான் புதிதான தீவிர திட்டமாக ஏற்படுகிறது. அதில் புதுமையோ தீவிரமோ மருந்துக்குக்கூட அதிகமாக இல்லை என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். ஸ்ரீ எம். என். ராயுடன் போஸ் ஏதோ பேச்சுகள் நடத்தினர்; ஆனல் ராயின் விபரீதமான புரட்சி திட்டத்தை ஸ்ரீபோஸ் அங்கீகரிக்கப் போகிருர் என்று நாம் நம்பவில்லை. ஸ்ரீ. எஸ். சீனிவாச அய்யங்கார்கூட புதிதாக இன்னும் ஒன்றும் சொல்லவில்லை. காங்கிரஸில் பிளவு கூடாது, ஒற்றுமைதான் இப்பொழுது தேவை என்றுமட்டும் சொல்லிக் கொண்டு வருகிருர். மற்ற அபேதவாதிகளுடைய அளப்புகளும் இப்பொழுது குறைந்துவிட்டன. ஸ்ரீ மஸானியும் ஜயப்பிரகாசரும் ஸ்ரீராயைக் கண்டிக்கிருர்கள். தீவிர மாறுதல் ஒன்றுக்கும் நாடு இப்பொழுது தயாரில்லை என்கிருர் ஆசாரிய நரேந்திர தேவ். ஸ்ரீ போஸும் தீவிர வாதிகளையும் மற்ற நண்பர்களையும் அனுதாபிகளையும் கூப்பிட்டுக் கலந்து யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் ஓடவில்லை. எப்படி ஓடும்? காந்திஜியின் திட்டத்தைக் காட்டிலும் தீவிரமாக இப்பொழுது வேறு எந்த திட்டம் போட முடியும்—நாட்டின் இயல்பிற் கிணங்க?

இந்த நிலைமையில் ஸ்ரீ போஸின் கடமை யென்ன? திரிபுரியில் தைரியமாக அவர் என்ன செய்யவேண்டும்? அவர் ராஜிநாமாச் செய்யவேண்டாம். பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மீது சுமற்றிய பழி வார்த்தைகளை வாபஸ் பெற்றுக்கொண்டால் மறுபடியும் காங்கிரஸிற்குள் ஒற்றுமை வரும். தற்கால திட்டத்தைத் தவிர தன்னிடம் வேறு திட்டம் இல்லை என்று பகிரங்கமாகச் சொல்லி கொள்கையை நன்ருக நிர்த்தாரணம் செய்யவேண்டும். அப்பொழுது ஒற்றுமை வரும். காந்தீயத்தைப் பூரண மனதுடன் அங்கீகரிக்க வேண்டும். அல்லது ஸ்ரீ போஸ் தைரியமாக ஸ்ரீ ராயைப் போல ஒரு புரட்சி திட்டத்தைக் கைக்கொண்டு காங்கிரஸிற்குச் சமர்ப்பித்து அதன் ஆதரவைப் பெறவேண்டும். அப்பொழுது அவருடைய தேர்தல் உண்மையான தேர்தல் ஆகும்; அவருடைய தலைமையும் உண்மையான தலைமையாகும். தான் கூறியபடி ஸ்ரீ போஸ் ஒரு புதிய தீவிரத் திட்டத்தைத் தயாரித்து காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குச் சமர்ப்பிக்காத வரையில் அவர் தன் கடமையைச் செய்தவராக மாட்டார்.

ஹிந்து கூறுவதுபோல காரியக்கமிட்டி மாஜி அங்கத்தினர்களுக்குக்கூட ஒரு கடமை இருக்கிறது. தலைவர் தேர்தல் சமயத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் பிரமித்தோ அல்லது வேறு விதமாகவோ திரிபுரிப் பிரதிநிதிகள் ஒரு தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன் பலன் நாட்டின் தலைசிறந்த தலைவர்களை இழப்பது என்றது அவர்களுக்குத் தெரியாது; காந்திஜியின் தலைமையையே இழப்பதாகும் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் திரிபுரியில் போஸ் நிலைமையை விளக்காவிட்டால் தலைவர்களாவது அதைச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அது இதுவரை அவர்களை நம்பி நடந்த நாட்டின்பால் அவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்பு.

குறிப்பு

## ஜன நாயக வீழ்ச்சி

ஸ்பெயினில் கலகக்காரர்கள் இறுதியில் வெற்றி பெறுவார்கள் என்பது சில வாரங்களுக்கு முன்பே தெளிவாகிவிட்டது. இன்று ஸ்பெயின் குடியரசு சின்னாபின்னமாகி விட்டது. ஜெனரல் பிராங்கோ வெற்றி முனையில் நிற்கிறார். மாட்ரிட் வீழ்ச்சிதான் பாக்கி.

இதற்கு மூலாதாரமான காரணம் ஐரோப்பிய ஜனநாயகங்களின் நடுநிலைமைக் கொள்கைதான் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்த நடு நிலைமைக் கொள்கை யென்பது நியாய புத்தியாலோ பட்சபாதமற்ற மனப்பான்மையாலோ ஏற்பட்டதல்ல வென்பதும் வெட்ட வெளிச்சம். அது பயங்கொள்ளித்தனம் சுய காரிய வாதம், இவ்விரண்டின் கலப்பு. இங்கிலாந்தும் பிரான்ஸும் கொள்கையை உத்தேசித்து ஸ்பெயினில் தலையிடாமல் இருக்கவில்லை. குடியரசை கைகொடுத்து ஒத்தாசை செய்ய வேண்டுமென்று எண்ணம்தான்; செய்யா விட்டால் சர்வாதிகாரிகளுக்கு பலமும் செல்வாக்கும் அதிகமாகும் என்று பயமும் உண்டு; ஆனால் பகிரங்கமாக அதற்கு ஒத்தாசைசெய்தால் சர்வாதிகாரிகளின் பொல்லாப்பு ஏற்படுமே, அதனால் 'ஏகப்பட்ட' தீங்குகள் ஏற்படுமே என்று பீதி. இந்த சங்கட ஸ்தானத்தில் இது வரையில் தவித்துக் கொண்டிருந்தன இங்கிலாந்தும் பிரான்ஸும்.

கலகக்காரர்களுக்கு ஒத்தாசை செய்து பிராங்கோவிற்கு உற்சாகமும் உதவியும் சர்வாதிகாரிகள் கொடுத்ததால்தான் இன்று அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டிருக்கிறது. "நாங்கள் தலையிடாமல் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்?" என்று சர்வாதிகாரிகளைக் கேட்கவோ, "நீங்கள் தலையிட்டால் நாங்களும் தலையிடுவோம்" என்று சொல்லவோ ஜனநாயகங்களுக்கு தைரியம் இல்லாமல் போனதால்தான் இன்று ஸ்பெயினில் ஜனநாயகம் வீழ்ச்சி யடைந்து விட்டது.

இங்கிலாந்தும் பிரான்சும் பகிரங்கமாக, வெட்கமின்றி, பிராங்கோவை ஸ்பெயினின் தலைவர் என்று அங்கீகரித்து விட்டன. "என்ன செய்கிறது? குடியரசு சர்க்கார் இருக்கிற இடமே தெரிய வில்லையே!" என்று ஸ்ரீ சேம்பர்லேன் பார்லிமெண்டில், வாய்கூசாமல் சொல்லுகிறார். தன் எல்லையில் மற்றொரு விரோதியை எப்படி வைத்துக் கொள்வது என்பது பிரான்ஸின் காரணம்.

நாம் கேட்பது ஒரே கேள்விதான். இந்த தீர்மானத்திற்கு பிரான்ஸும் இங்கிலாந்தும் சில மாதங்களுக்கு முன்பே வந்திருந்தால் ஸ்பெயினில் இவ்வளவு உயிர்ச் சேதமும் சொத்து நஷ்டமும் ஏற்பட்டிருக்க வேண்டாமே! இன்னும் சில நகரங்கள் பாழாகாமல் இருக்குமே. ஸ்பெயினில் பாதி குட்டிச் சுவராகப் போன பின் தானா வல்லரசுகளுக்கு இந்த புத்தி வரவேண்டும்! அல்லது கடைசி வரையிலும் பிராங்கோவை நிராகரிக்கும் தைரியம்தான் இருக்கக்கூடாதா?

## பாலஸ்தீன மகாநாட்டு மழுப்பல்

பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் 'வழவழா'க் கொள்கை (Policy of drift) இங்கிலாந்தின் சரித்திரத்தில் கைகண்டமுறை. ஆனால் இதற்குமுன் இருந்ததீரர்கள் அதைப் பிரயோகிக்கும் சமயத்தை அறிந்து பிரயோகம் செய்தார்கள். இப்பொழுதிருக்கும் ராஜ தந்திர வரட்சியில் 'எல்லு செட்டி லெக்க ஏகலெக்க' என்ற பழமொழிபோல், பிரிட்டன் எல்லா விஷயங்களிலும் இந்தக் கொள்கையை அனுசரிக்கிறது.இது கன்சர்வேடிவ்களின் பாணம். ஆனால் கால மாறுதலை அனுசரிக்க வேண்டாமா?

அபிசீனியா, சைனா, ஸ்பெயின் இந்த நாடுகளின் சுதந்திரம் சீரழிந்ததற்குக் காரணம் இந்தக் கொள்கை; ஏனென்றால் பிரிட்டனில் ராஜ தந்திரம் குறைந்தாலும் அதன் செல்வாக்கும் பலமும் குறையவில்லை. இன்றும் உலக அரசியல் விவகாரங்களில் அதற்கு ஒரு தலைமை இருக்கிறது.

பாலஸ்தீனப் பிரச்னை ஒரு பெரிய மழுப்பல். லண்டனில் நடக்கும் மகாநாடு முடிவாக ஒன்றும் செய்ய முடியாதுபோல் தெரிகிறது. அராபியர்கள் ஒரு புறமும் யூதர்கள் ஒரு புறமுமாக இழுக்கிறார்கள். ஸ்ரீ சேம்பர்லேனும், ஸ்ரீ மாக்டொனால்டும் என்னென்னமோ செய்து பார்க்கிறார்கள். யூதர்கள் தாங்கள் பாலஸ்தீனத்தில் ஒரு சிறு பான்மையோர் என்ற நிலைமையை ஒப்புக் கொள்ளவே முடியாதென்கிறார்கள். அரபியர்களோ யூதர்கள் குடியேற்றத்தை நிபந்தனைக் குள்ளாக்கித் தடுக்கவேண்டு மென்கிறார்கள். இந்த இரண்டு போக்குகளுக்கு நடுவில் பிரிட்டிஷ் மழுப்பலே முழித்துப் போய்விட்டது. ஆனால் நிலைமை

யைச் சமாளித்து இருவரிடையேயும் சமரஸம் ஏற்படுத்த பிரிட்டனால் முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்படித் தீர்மானமாக ஒருவழி செய்வதற்குத்தான் அதற்கு தைரியமில்லை ஒருபுறம்; ஏகாதிபத்தியக்காரணங்களால் இஷ்டமில்லை மற்றொரு புறம். இந்தியா விஷயமாகக் கொண்டிருக்கும் மனப்போக்குத்தான் அங்கேயும் வேலை செய்கிறது. இந்தியாவில் என்ன ஒரு நிர்ணயமான கொள்கை இருக்கிறது?

## சமஸ்தானங்களும் மத்திய அரசாங்கமும்

காந்திஜி தீவிரமாக சமஸ்தானங்கள் விஷயத்தில் தலையிட ஆரம்பித்தவுடன் பிரிட்டனில் கொஞ்சம் கலவரம் ஏற்பட்டுவிட்டது. பார்லிமெண்டில் அங்கத்தினர்கள் கர்னல் மூர்ஹெட்டை சங்கடமான கேள்விகளெல்லாம் கேட்கிறார்கள். சமஸ்தானங்ளில் காங்கிரஸ் தலையிடுவதைப் பார்த்துக்கொண்டு மத்திய சர்க்கார் சும்மா இருக்குமா? மத்திய சர்க்கார் காங்கிரஸை எச்சரிக்குமா? சமஸ்தானங்களுக்கு உதவிசெய்ய மத்திய அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கவில்லையா? என்றெல்லாம் கேள்விகள் சரமாரியாகப் பொழிகிறார்கள். கர்னல் மூர்ஹெட் சங்கடத்தில் ஏதோ பிசகாக வேறு சொல்லிவிட்டுப் பிறகு வாசகத்தை மாற்றவேண்டிய அவசியம்கூட ஏற்பட்டுவிட்டது. "அதற்கென்ன இப்பொழுது? உடன்படிக்கையா—விஷயம் காங்கிரஸிற்கு நன்றாகத்தெரியுமே! மத்திய சர்க்கார் தலையிடவேண்டிய நிலைமை இல்லை." என்று மூர்ஹெட் சொல்லிவிட்டார்.

ஆனால் நிலைமை முற்றித்தான் இருக்கிறதென்பதில் என்ன சந்தேகம்? காந்திஜி ராஜ்கோட்டிற்குப் போயிருக்கிறார். நிலைமையை நேரே ஆராய்ந்து சமரஸம்செய்ய முடியுமா என்று பார்க்கப்போயிருக்கிறார். தாற்காலிகமாக சத்தியாக்கிரகத்தையும் நிறுத்தியிருக்கிறார். வைசிராய் ஜெய்பூருக்கு வந்திருக்கிறார். அங்கு அரெஸ்ட்டுகள் மும்மரமாகத்தான் நடக்கின்றன. ஆகையால் சமஸ்தானங்கள் பிரச்சனையைப்பற்றி இன்று அதிகாரிகளும் இந்திய ஜனசமூகத்தின் பிரதிநிதியான காந்திஜியும் தீவிரமாக ஆலோசனை செய்கிறார்கள். முடிவு என்ன? தெரிந்ததுதானே!

## ஜனநாயகப் பூசல்

காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் ராஜினாமாச் செய்ததைக் கண்டித்து சில விஷமிகள் ஜனநாயகப் பூசலைக் கிளப்புகிறார்கள். நியாயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு விதிகளின்படி காரியக்கமிட்டி கீழ்ப்படிய வேண்டியது ஜனநாயக முறையல்லவா? அப்படியிருக்க அவர்கள் அவருக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் பதவியிலிருந்து விலகுவது பிசகு என்று தாக்குகிறார்கள்.

தேர்தலே நியாயமாக நடந்ததா என்பது ஒரு கேள்வி. பெரியதிட்டங்கள் பேச்சையும், காரியக்கமிட்டி அங்கத்தினர்களின் பெடரல் மந்திரி சபை ஜாப்தாப் புரளியையும் கிளப்பி ஸ்ரீ. சுபாஷ் முறையற்ற பாதையில் சென்று மக்களின் மனதைக் குழப்பி ஓட்டுகளைப் பெற்றார். அது போகட்டும்.

தங்கள் அபிப்பிராயத்திற்கு நேர்விரோதமாக ஒருவர் திட்டம்போட்டுக் கொண்டு தலைவர் பதவிக்கு வந்தால் அவருடன் ஒத்துழைப்பதற்கு முடியாமல் அங்கத்தினர்கள் ராஜினாமாச் செய்தால் அதில் ஜனநாயக முறைக்கு முரண் எங்கே இருக்கிறது? சொல்லப்போனால் அதுதானே சரியான ஜனநாயகமுறை! அபிப்பிராயபேதம் கொண்ட மந்திரி, சபையிலிருந்து ராஜினாமாச்செய்வது போல் தானே? காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் ராஜினாமாச் செய்யாமல் முட்டுக்கட்டை போட்டால் அல்லவா பிசகு?

மேலும் அவர்கள் நடத்தையையே, யோக்கியதையையே, குறைகூறிக் குற்றம்சாட்டி அதன் பலனாகத் தேர்தல்பெற்ற தலைவரின் கீழ் சுயமரியாதை கொண்ட எந்தத்தொண்டர் வேலைசெய்ய முடியும்? ஜவஹர்லால் சொல்லுவதுபோல அப்பேர்பட்ட குற்றச் சாட்டினபிறகு காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் ராஜினாமாச் செய்யாமல் வேறென்ன செய்யமுடியும்? அது லேசான குற்றச்சாட்டா? அவர்களுடன் நிற்கிறதா அது? அவர்களுக்கும், காங்கிரஸிற்கும் சென்ற வருஷம் பூராவும் ஸ்ரீ. சுபாஸ்போஸுக்கும் கூட யோசனை கூறிக்கொண்டு வந்த காந்திஜியையே தாக்குகிறது. அந்தக்குற்றச்சாட்டைப் பற்றி எண்ணிப் பார்த்தாலே ஸ்ரீ. போஸின் மனப்பான்மை வெட்டவெளிச்சமாகிறது. தேர்தல் நிமிஷம்வரையில் ஸ்ரீ. போஸும் அந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டு சும்மா தானே இருந்தார்? தேர்தலில் ஆட்சேபணை இல்லாவிட்டால் மேலும் இருந்துதானே இருக்கப்போகிறார்? தேர்தலில் தனது சுயநல ஆசைக்கு விரோதமாக அவர்கள் எதிரே வந்து நின்றதால் போஸ் நிர்த்தாக்ஷிண்யமாக அவர்களைத் தாக்கி வீழ்த்திவிட்டார். அவ்வளவுதான். இதில் ஜனநாயகம் எங்கிருக்கிறது, நியாயம் எங்கிருங்கிறதென்று கேட்கிறோம்.

# போகிற போக்கில்



சென்றவாரம் பலமான சுற்றுப் பிரயாணம் எனக்கு நேர்ந்துவிட்டது—பெங்களூர், கோயம்புத்தூர், காரைக்குடி, திருக்கடையூர், சிதம்பரம், சென்னை. ஆயிரம் மைலுக்கு மேல் சென்ற வாரம் ரயிலோட்டம் ஓடினேன். மூன்றாவது வகுப்பில் தோட்டி முதல் தொண்டமான் வரையில்—எல்லோரும் தொண்டர்கள்தானே—பலருடன் சிநேகம் புகுந்தேன். குழந்தை போல் கண்கொட்டாமல் ஜன்னலருகில் உட்கார்ந்துகொண்டு, நிலக்கரியை கொஞ்சங்கூடப் பாராட்டாமல், காக்ஷிகளைக் கண்டு கவர்ந்தேன். வறண்ட நதிகளையும், பஞ்சத்திலடிபட்ட வயல்களையும் கண்டேன். கண்ணில் கண்ணீரை வரவழைத்தேன். ஓய்வில்லாத அமைதியுடன் கதிரவனைக் கடவுள்போல் தலை நிமிர்ந்து உற்றுப் பார்க்கும் மலைச் சிகரங்களையும், மந்திரிகளுக்குப் பக்கத்தில் சட்ட சபையில் புன்சிரிப்புடன் தயாராய் நிற்கும் 'பார்லிமெண்டரி செக்ரிடரிகளை'ப்போல் காத்து நிற்கும் குன்றுகளையும், எங்கும் பரவி ஓடும் காடுகளையும், இன்னும் பல காக்ஷிகளையும் கண்கொட்டாமல் பார்த்தேன். பல விடங்களில் சொற்பொழிவாற்றினேன். பல தலைவர்களைக் கண்டு நாகரீக உல்லாசத்தில் சம்பாஷணையில் ஆழ்ந்தேன். கயிறு திரிக்கும் தொழில் முதற்கொண்டு மந்திரி பதவி அடையும் அரசியல் தொழில் வரையில் விவரம் கற்றுக்கொண்டேன். யோகசித்தி முறையைக்கூட எட்டிப்பார்த்தேன்.

இவைகளையெல்லாம் பற்றி உல்லாசமாய் இந்த வாரமாவது எழுதலாமென்று எண்ணியிருந்தேன். ஆனால் நண்பர்களுக்கு அதிருஷ்டமில்லை. மகாத்மா காந்தி இதைத் தடுத்து விட்டாரே! ராஜ்கோட்டிற்கு சமஸ்தான நெருக்கடியில் கலந்துகொள்ளப் புறப்பட்டுவிட்டார். இச்சமயத்தில் பயமறியாத கன்றுக்குட்டி போல் துள்ளி விளையாடினால் பார்ப்போர் என்ன சொல்லுவார்கள்—பத்திரிகை யுலகில்?

* * *

மகாத்மா ராஜ்கோட்டிற்குத் திடீரென்று புறப்பட்டுவிட்டாரென்று தினசரிப்பத்திரிகையில் நான் வாசிக்கும்பொழுது என் துக்கடா ரயில், அகண்ட கொள்ளிடப் பாலத்தின்பேரில் எரும்புபோல் ஊரிக்கொண்டு சென்றது—ரயில் துக்கடா 'ஷட்டில்' தொடராயிருந்தாலென்ன! தண்ணீர் குடிக்கும்சமயத்தில் இஞ்சினைப்போய் வேடிக்கை பார்த்தேன். மிகவும் பழையதாய் கடகடவென் றிருந்தாலும் பளீரென்று வீசும் பித்தளைப் பட்டம் வகித்துப் பேர்கொண்டிருந்தது அது. என்னடா இந்த எஞ்சினுக்குக்கூட பேரும் ஊரும் என்று ஆச்சரியமடைந்தேன். நண்பர்களே, அதன் பெயர் என்னவென்று நினைக்கிறீர்கள்—'வாரன் ஹேஸ்டிங்ஸ்', ஆங்கில அரசாட்சியில் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தவரின் பேர். போகட்டும்; ரயில் எஞ்சினாவது அவர் பெயரை மறக்கவிடாமல் காப்பாற்றுகிறதே!

* * *

மகாத்மா ராஜ்கோட்டிற்குப் புறப்பட்டு விட்டாரென்று நான் பத்திரிகையில் கண்டவுடன் என் ரயிலே கொள்ளிடத்தில் விழுந்துவிட்டது போல் திடுக்கிட்டேன். சமஸ்தானச் சண்டை சமாதானமடைய வேண்டும். காங்கிரஸ் கோரினபடி சண்டை வளராமல் காரியம் முடிவுபெறவேண்டும் என்று ஏழுமலையானை வேண்டிக்கொண்டேயிருந்தேன். பலிக்கவில்லையே! மகாத்மாஜியே ராஜ்கோட்டிற்குப் போய் தன் சொந்த ஊரிலேயே சத்யாக்ரஹம்

அளிக்கவேண்டுமென்றால் நெருக்கடி மிகவும் அதிகமாய்த்தானே யிருக்கவேண்டும். முன் எடுத்துவைத்த காலை வெற்றியடையாமல் மகாத்மா பின் எடுத்து வைப்பாரா? திரிபுரி காங்கிரஸுக்குக்கூட தான் நினைத்த காரியம் கை கூடாமல் திரும்பி வரமாட்டாரே. அவர் உதவியும் தைரியமும் அன்னியில் ஸ்ரீ சுபாஷ் போஸ் என்ன செய்வார்? அவர் சரீர ஜ்வரவேகம் 103 டிகிரி என்றால், அரசியல் வலக்கை-இடக்கை ஜ்வரவேகம் 105 டிகிரி ஆகியிருக்கிறது! இந்த வேகத்தைத் தாங்கி ஜ்வரத்தைத் தணிக்க தன்வந்திரி காந்திஜியல்லவோ திரிபுரியில் மருந்துப்பெட்டியுடன் வேண்டும் என்று தவித்தேன்.

* * *

உரக்கச் சொல்ல எனக்குத் தைரியம் இல்லையே யொழிய இந்த ராஜீனாமா திருவிழாக் கொண்டாட்டம் எனக்கு உண்மையில் பிடிக்கவில்லை. இப்பிளவு இந்த சமயத்தில் அவசியமேயில்லை: ராஜீனாமா செய்யவேண்டிய நெருக்கடி இன்னும் ஏற்படவில்லை யென்று தான் நான் கருதுகிறேன். சரம் மாதிரி விழுந்த அறிக்கைகளை முன்னும் பின்னும் நான் நன்றாய்ப் படித்துப் பார்த்தேன். ஒன்று சேர்ந்து பன்னிரண்டு உத்தமத் தலைவர்கள் ராஜீனாமா செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விட்டதாக எனக்குத் தோன்றவில்லை. பூர்ண சுயராஜ்யம் கிடைக்கும் வரையில் அப்பேற்பட்ட நெருக்கடி ஒரு நாளும் ஏற்படக் கூடியதல்ல. ஸ்ரீ சுபாஷ்போஸ் இந்தப் பன்னிரண்டு உத்தமர்களையும் கொஞ்சம் மரியாதைக் குறைவாய் இளம் பிள்ளைபோல் சொன்னால்தான் என்ன? அந்த வார்த்தைகளினால் யாருக்குக் குறைவு? இவர்களுக்கு என்ன குறைவு? சுபாஷ் போஸுக்குத்தானே குறைவு. சூரியனை சாணி உருண்டையால் அடிக்க வெல்லுமா? ராஜீனாமா அவசரப்பட்டு கொஞ்சம் கோபத்தில் கொடுக்கப்பட்டதென்றே நான் நினைக்கிறேன். இதினாலே ஒருவரையொருவர் மனம்தெளியக் கலக்காமலும், ஒற்றுமைக்கு வழி ஏற்படாமலும், போய் விடுமோ வென்று அஞ்சுகிறேன். திரிபுரி காங்கிரஸில் கூடி காரியக்கமிட்டியில் ஆலோசிக்கும் சமயத்தில், போக்குவரத்து செய்யும் பொழுது, உண்மையிலே வலக்கைக்கும் இடக்கைக்கும் ஒற்றுமைக்கு இடமில்லையென்று தெளிவாய்த் தோன்றினால் அப்பொழுது புதுக்காரியக் கமிட்டியில் தாங்கள் சேரமுடியாதென்று சொல்லிச் சாந்தமாய் விலகி விட்டால் போதாதா? இந்த சமயமா ராஜீனாமா செய்து பிளவு ஏற்படுத்தக் கூடிய சமயம்? வெண்ணெய் திரண்டு வரும்பொழுது, மத்து இழுக்கும் கயிறுமேலேயோ, 'ஐயோ பாவம்' என்று நிற்கும் கம்பத்தின் பேரிலேயோ கோபித்துக் கொண்டு, தாழியை உடைக்கிறதா? ஆனால், இனிமேல் நடந்துபோன ராஜீனாமாவைப்பற்றி நான் விசனப்பட்டு என்ன லாபம்? சிந்திய பாலை என்ன செய்கிறது? அதுவும் மகாத்மா சிந்திய பாலை! அக்பானத்தில் சிந்திய பாலை வழித்து எடுத்தால் மண்தான் கைக்கு மிச்சம்.

* * *

போகட்டும். ஓர் உண்மையை மறந்தால் நமது அரசியலில் ஏற்படும் நெருக்கடியில் எல்லாக் காரியமும் அழிந்து போகும். சுயராஜ்யம் கிடைக்கும் வரையில் பிளவிற்கு வழி கிடையாது. காரணமுமில்லை. எல்லோரும் மகாத்மாவையே பின்பற்றி அவர் சொல்லை, சரியோ தப்போ வேத வாக்கியமாக எண்ணி, எல்லோரும் ஒன்று சேர்ந்து நடக்க வேண்டியது நமது கடமை.

ஆகையால் ராஜ்கோட்டில் எந்த வேலையிருந்தாலும் அதைப் பாராட்டாமல் அதை விட்டுவிட்டு மகாத்மா காந்தி திரிபுரிக்குத் திரும்பி ஒன்று சேர்த்து வைக்க வேணுமென்பது தான் எங்கள் கோரிக்கை.

* * *

தண்டவாளத்தை விட்டு விலகி ரயில் ஆற்றில் விழுந்த பிறகு அதைத் தூக்கி மறுபடியும் பாதையில் வைத்துவிட்டு, வைத்துவிட்டோமென்று கைகொட்டிக் களிப்பதைவிட ரயிலைக் கீழேயே விழாதபடி பாதுகாத்துக்கொண்டு போவது உத்தமமல்லவா? தன் கையில் 'கிரேன்' இருக்கிறது என்னும் பெருமையில் ரயிலைக் கீழே தள்ளிப் பார்ப்பது பெருமையா? தன் கையில் விஷக்கடி மருந்து இருக்கிறதென்ற தைரியத்தில் பாம்பு வளையில் கையை விடுவதா?

மணி.

# வார நடப்பு

எதிர்பார்த்தபடியே இங்கிலாந்தும் பிரான்ஸும் பிராங்கோவை அங்கீகரித்துவிட்டன. அதாவது ஸ்பெயின் சர்க்காருக்கு இனிமேல் மதிப்புக் கிடையாது. காமன்ஸ் சபையில் சேம்பர்லேன் இங்கிலாந்து பிராங்கோவை அங்கீகரித்துவிட்டதாகச் சொல்ல,ஒரு லேபர் கட்சி அங்கத்தினர் பிரதம மந்திரியை 'தேசத் துரோகி' என்று ஆசீர்வாதம் செய்ய ஸ்பெயின் நாடகம் இனிது முடிந்தது. இனிமேல் ஸ்பெயின்சர்க்கார் நடைப்பிணம்தான். தலைவர் ஆஸானு பிரான்ஸில் ஒரு பங்களா வாடகை எடுத்துக்கொண்டு 'ஹாய்'யாக ஓய்வு எடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார். ஜெனரல் மயாஜா என்ற ஸ்பெயின் சர்க்காரின் தளகர்த்தர் நடையைக் கட்டப் பார்க்கிறார். முக்கியமான ராஜ தந்திரிகள் வெளியூருக்கு 'டிக்கட்' வாங்கிவிட்டார்கள். சரி, இனிமேல் பிராங்கோதான் ராஜா.

இதாலிக்கும் ஜெர்மனிக்கும் ரொம்ப சந்தோஷம். எடுத்த காரியத்தைச் சர்வாதிகாரிகள் சாதித்துவிட்டார்கள். சர்வாதிகாரிகளைத் திருப்திபடுத்த ஸ்பெயினைக் காட்டிக் கொடுத்தாகிவிட்டது.

போலந்தில் மாணவர்கள் ஜெர்மனிக்கு விரோதமாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால் ஹிட்லர் இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "சீ! இந்தப் பசங்களை நாம் லட்சியம் செய்யவாவது?" என்று சொல்லிவிட்டு வழக்கம்போல் ஜனநாயகங்களைத் தாக்க ஆரம்பித்தார். "யுத்தப் பேய்" பிடித்தவர்களுக்கு ஜெர்மனி சரியான ஜவாப் கொடுக்க முடியும் என்று மீசையை முறுக்கினார். ஸ்பெயின் விஷயத்தில் ஜனநாயகங்கள் நல்லபிள்ளைகளாக நடந்துகொண்டும்கூட ஹிட்லர் திருப்தியடையவில்லை போலிருக்கிறது.

பாலஸ்தீன மகாநாட்டில் பிரிட்டிஷ் சர்க்கார் சில ரஸமான பிரேரணைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முக்கியமாக, பாலஸ்தீனத்தில் சீர்திருத்த அரசியல் கொண்டுவரப் போவதாகவும், அதில் பிரிட்டிஷ், அராபிய, யூதப் பிரதிநிதிகள் பங்கெடுத்துக்கொள்ளலாமென்றும், பாலஸ்தீனத்திற்கும் இங்கிலாந்திற்கும் தற்காப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும், இதுவிஷயமாக எல்லா விஷயங்களையும் விவாதித்து முடிவுக்குவர விரைவில் வட்டமேஜை மகாநாடு கூட்ட வேண்டுமென்றும் கூறப்பட்டது. பிரிட்டிஷ் பிரேரணையை யூதர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் பனிரண்டு பேர்கள் செய்த ராஜினாமாவை காங்கிரஸ் தலைவர் போஸ் ஒப்புக்கொண்டுவிட்டார். திரிபுரி காங்கிரஸுக்கு வேகமாக ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடியால் திரிபுரி காங்கிரஸ் மிகவும் 'விருவிருப்பாக' இருக்குமென்று நிருபர்கள் கூறுகிறார்கள்.

தேக நிலைமை மோசமாயிருந்தபோதிலும் காங்கிரஸ் தலைவர் நிச்சயம் திரிபுரிக்கு ஒரு நாள் முன்னதாகவே வந்து சேருவார் என்று தெரிகிறது.

மகாத்மா காந்தி ராஜ்கோட்டுச் சென்று அதிகாரிகளுடன் சமரசப் பேச்சு நடத்திவருகிறார். சத்தியாக்கிரஹம் தற்காலம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. காந்திஜியின் லக்ஷ்யம் நிறைவேறி சமஸ்தானத்தில் அமைதி உண்டாகலாம் என்று அரசியல்வாதிகள் நம்புகிறார்கள்.

ஜெயபூரில் சத்தியாக்கிரஹம் நடந்து வருகிறது. காந்திஜியின் முயற்சியால் விரைவில் சமஸ்தான நெருக்கடியே தீர்க்கப்படலாம்.

ரங்கூனில் மறுபடியும் குழப்பம் உண்டாயிருப்பதை அறிகிறோம். ஒரு சட்டசபை அங்கத்தினர் வீட்டை சில காலிகள் தாக்கியதாகவும் அவர் துப்பாக்கியால் சுட்டு மூன்று பெயரைக்காயப்படுத்திக் கூட்டத்தைக் கலைத்ததாகவும் தெரிகிறது. காலிகள் ஓர் இந்தியக் குடும்பத்தை நாசம் செய்துவிட்டார்கள். பர்மாவில் பலருக்கு பைத்தியம் தலைக்கேறிவிட்டதென்பதை இச்சம்பவங்கள் காண்பிக்கின்றன.

சென்னை சர்க்கார் இரண்டு முக்கிய வரிகளை இவ்வருஷம் விதித்திருக்கிறார்கள். பெட்ரோல்மீதும், புகையிலைமீதும் வரிகள் போடப்பட்டிருக்கின்றன.

மத்திய சர்க்கார் வரவு செலவு திட்டத்தை சர் ஜேம்ஸ் கிரிக் சமர்ப்பித்து விட்டார். 1939-40 பட்ஜட் திட்டப்படி வரவு 8215 லக்ஷங்கள். செலவு 8265 லக்ஷங்கள். ஆகவே 50 லக்ஷம் துண்டு விழுகிறது.

கிராம சேவை

# சில கேள்விகள்

(ஸ்ரீ. பி. எஸ். சேஷாத்திரி அய்யங்கார்)

தேச முன்னேற்றமும், தேச விடுதலையும் கிராம அபிவிருத்தியில் அடங்கியிருக்கின்றன. பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்டமும் எங்கும் பரவி விட்டதால், கிராமவாசிகள் ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாது திண்டாடுகிறார்கள். நமது தேசத்தில் 35 கோடி மக்களில் 100-க்கு 90-பேர் வீதம் கிராமவாசிகளாகவே இருக்கிறார்கள். இவர்கள் உணவுக்கும் உடைக்கும் திண்டாடிக் கொண்டிருக்கும் வரையில் தேசம் முன்னேற்றம் அடையவே அடையாது. ஆகவே கிராமங்களில் குடிசைத் தொழில்களைச் சீர்திருத்தி விவசாய முறைகள் அபிவிருத்தி யடையுமாயின் அதுவே மக்களின் வறுமைப்பிணியைப் போக்கும்.

இவ்வுயரிய உத்தேசத்தைக் கொண்ட இப்பத்திரிகையில் நானும் சிறிய கட்டுரைகள் மூலம் கிராம வாசிகளுக்குத் தொண்டாற்றலாம் என்ற எண்ணத்துடனே, கிராம சேவை என்ற தலைப்பின்கீழ் சில விஷயங்கள் எழுதலாம் எனத் துணிந்தேன். கிராமவாசியின் சீர்திருத்தத்தைப் பற்றி யோசிக்குமுன், கிராம வாசிகளிடையே கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. அவர்கள் குடும்பத்தில் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர்கள் தினசரி சம்பாதிக்கக் கூடியவர்கள்?

2. வருஷாந்திர உத்தேச வருமானம் என்ன?

3. அவர்களுக்கு நிலம் சொந்தத்திலுண்டா? எவ்வளவு விஸ்தீரணம்?

நஞ்செய்—புஞ்செய், தோட்டக்கால் முதலியன.

4. அவர்களுக்கு ஆடுகள் மாடுகள் உண்டா?

5. வண்டி உண்டா? (வாடகை வண்டியா?)

6. அவர்களுக்கு ஏதாவது கிராமக் கைத்தொழில் செய்யத் தெரியுமா? என்ன தொழில்? இப்போது நடைபெற்றுவருகிறதா? இல்லையா? இல்லையானால் தெரிந்த வரையில் காரணங்கள் என்ன?

7. அவர்கள் கிராமத்தில் வசிப்பதற்கு முக்கியமான காரணம் என்ன?

8. விவசாயியானால் பயிர்த் தொழில் கட்டிவருகிறதா?

9. ஊரில் உள்ள தொழில்கள் யாவை?

10. தட்டான், வண்ணான், தச்சன், கொல்லன், வாணியன் (செக்குள்பட) பரியாரி (அம்பட்டன்) ஊரிலிருக்கிறார்களா?

மேலே உள்ள விஷயங்களுக்குத்தகுந்தவாறு புள்ளி விஷயங்கள் கிடைத்தால் கிராமவாசிகளின் நிலைமையை அறிந்து அதற்குத்தக்க உதவியை அளிக்கக்கூடும்.

மேலே சொன்ன பத்து விஷயங்களும் கிராமவாசியின் நன்மையைக் குறித்தே, அவர்கள் வருவாயின் உயர்வைக் குறித்தே வேண்டிய விஷயமாதலால், உண்மையை ஒளிக்காமல் அவர்கள் அறிவித்தல் அவசியமாகிறது.

இந்தமாதிரி ஒரு கிராமத்திற்குப் பூராவும் தகவல் கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு ஒரு சீர்திருத்தத் திட்டம் போடலாம்.

மேற்சொன்ன புள்ளி விபரங்களை சர்க்கார் திரட்டி வைத்துக் கொண்டால் மிகவும் உபயோகமாயிருக்கும். தீர்மானமான புள்ளி விபரங்கள் இதுவரை தயாராக வில்லை. இதற்குப் பணச்செலவும், உழைப்பும் தேவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கிராம முன்னேற்றத்தில் கருத்துள்ள எந்த சர்க்காரும் இப்படிப்பட்ட தகவல்களை விசாரித்தறிந்து கொள்ள வேண்டும். எத்தகைய திட்டம் போடுவதாயிருந்தாலும் தீர்மானமான புள்ளி விபரங்கள் மிகவும் அடிப்படையாயிருக்கின்றன. கிராமங்கள் கஷ்டப்படுகின்றன என்று சொன்னால்மட்டும் போதாது. எத்தகைய வியாதி என்று கண்டு பிடித்த பிறகுதானே வைத்தியர்கள் மருந்துகொடுக்கவேண்டும்?

# மிருக சிகிச்சை

(ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி)

விவசாயத்தையே வாழ்வில் முக்கிய ஆதாரமாகக்கொண்ட நமக்கு கால்நடைகளின் விஷயங்களே தெரியாதென்று கருதுவோர் நம்மில் அநேகர் உளர். கால்நடைகளின் சிகிச்சை, அதற்காகவேண்டிய வைத்தியசாலைகள்—இவைகளைச் சென்ற 30, 40 வருஷங்களாகத்தான் நாம் தெரிந்து வருகிறோம் என்பது தவறு. அசோகரின் காலத்தில் அநேக மிருக வைத்திய சாலைகள் இருந்ததாகவும், சுற்றுப்பிரயாணம் செய்யும் மிருக வைத்தியர்கள் ஊரூராய்ச் சென்று தங்களாலியன்றமட்டும் வைத்தியம் செய்து, இயலாதவைகளை ஆங்காங்குள்ள வைத்திய சாலைகளுக்கு அனுப்பினதாகவும் சரித்திர மூலமாய் அறிகிறோம். இந்த வைத்திய சாலைகளும் மிருக சிகிச்சை விஷயங்களும் அசோகரின் காலத்திற்குப் பிறகு நமது தேசத்தில் ஏற்பட்ட உள் நாட்டுச் சச்சரவினாலும், பின்னால் தேசத்தைக் கைப்பற்றியவர்களின் சிரத்தைக் குறைவினாலும், நாளடைவில் நசித்துவிட்டன. வாகடங்கள் என்று சொல்லப்படும் ஏட்டுப் பிரதிகளில் அசுவ வைத்தியம், கால் நடைச் சிகிச்சை முதலான அரிய விஷயங்களை மிக்க அனுபவத்துடன் அக்காலத்து வைத்தியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். மேல்நாட்டு வைத்தியமுறையில், நம்பிக்கை இல்லாது, ஈடுபட்டோம். நம் நாட்டுப் பழைய வைத்திய முறைகளின் மேன்மையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அதை அனுபவத்திற்குக் கொண்டு வரவேண்டிய முயற்சிகளைச் செய்யவில்லை. ஆகவே இரண்டு முறைகளையும் ஒழித்து, போலி வைத்தியர்கள் வசமாகி நம் நாட்டுக் கால்நடைகளின் மேன்மையையும், அபிவிருத்தியையும் இழந்தோம். கடைசியாகத் தற்கால கால்நடை இலாகா உத்தியோகஸ்தர்கள் மிருக சிகிச்சை செய்யும் முறையையே ஓர் அதிசய சம்பவமாகக் கருதும் நிலைமையை அடைந்திருக்கிறார்கள். இந்த ஸ்திதிக்கு மேல்நாட்டுக் கல்வியும், நாகரிகமும், நம்மை ஆளாக்கிவிட்டதென்று சொல்வதும் தவறாகாது. நமக்கு தேசீயக்கல்வி இல்லாமல் போனதோடு, மேல்நாட்டுக்கல்வித் திட்டம், மேல்நாட்டு நாகரிகம், மேல்நாட்டு நடையுடை பாவனைகள், நம்மில் ஊன்றி நம் நோக்கத்தையே மாற்றிவிட்டன. சுயேச்சையை இழந்து, நமது தேசீய உணர்ச்சியையே மறந்து, பிற ஆதீனத்திற்குள்ளாகி, அதைப்போற்றவும் ஆரம்பித்த நமக்கு, அடிமை உணர்ச்சி மேலிட்டு, நம் பிறவிக் குணமாகவே மாறிவிட்டது.

ஒரு விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கவோ, தெரிந்ததை ஊக்கத்துடனும் யூகத்துடனும் செய்யவோ, முடியாமல் போகிறது. சுருக்கிச்சொன்னால், வறுமை, மூளையை, இருந்தும் இல்லாததாகச் செய்கின்றது. மேல் கூறிய காரணங்களினால்தான் தற்காலம் விவசாய இலாகாவும், கால்நடை இலாகாவும் செய்துவரும் முயற்சிகளில் ஜனங்களுக்குப் பற்றில்லாமல், அவைகள் கொடுக்கவேண்டிய பலனைக் கொடுக்கிறதில்லை.

விவசாயம் முன்னேற்றமடைவதற்குக் கால் நடைகளின் அபிவிருத்தி முக்கியம். கால் நடை அபிவிருத்திக்கு ரயத்தின் சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் முக்கியம். அதாவது ரயத்துக்குக் கல்வி இன்றியமையாதது. கால்நடை அபிவிருத்தி அடைந்தால் அதாவது தேசத்தின் மூலதனம் வளர்ச்சியடைந்தால் கல்விபயில வசதி உண்டு. கல்யாணமானால்தான் பயித்தியம் தீரும், பயித்தியம் தீர்ந்தால்தான் கல்யாணமாகும் என்ற விதண்டா வாதத்தில் நம் முயற்சிகள் நடந்தால் ஒன்றும் நடவாது. ஒரு விஷயத்தைப் பற்றிய விசாரணையும் முடிவுபெறாது. நமக்குத் தற்கால மிருக்கும் வசதிகளைக்கொண்டு கால்நடை அபிவிருத்திக்குப் பலனளிக்கக்கூடிய முயற்சிகள் செய்வதில் ஈடுபடவேண்டும்.

# சத்தியப் போர்

" சக்தி தாஸன் "

இன்றையதினம் சர்வதேச நிலை எப்படியிருக்கிறது? அது ஒரு கொலைக்களமாயிருக்கிறது. ஒன்று மறியாத பாமரமக்களைக் கொலை செய்ய யுக்தி செய்யப்படுகிறது. அபிஸீனியாவிலே முஸோலினி மூர்க்கத்தனத்தின் சிகரத்தில் ஏறி நின்று, நிரபராதிகளான ஜனங்கள் மீது விஷவாயு பிரயோகம் செய்தார். சீனத்திலே ஜப்பான் செய்யும் அட்டூழியங்களை அளவிட்டுச் சொல்ல முடியுமா? ஆஸ்பத்திரி மீதும், பள்ளிக்கூடங்கள் மீதும் வெடி குண்டு வீசும் அநாகரிக ராஜ்யத்தை எங்கேயாவது கண்டதுண்டா? அரக்கர் ஆட்சியில் தான் காணமுடியுமா? நோயாளிகளும் சிறுவர்களும் ஜப்பானுக்கு என்ன செய்தார்கள்? ஸ்பெயினிலே பிராங்கோ செய்யும் அட்டூழியத்துக்குக் கணக்குண்டா? நாகரிகத்தின் உச்சியில் நிற்கும் மக்கள் செய்யும் அநாகரிக அட்டூழியங்களை அரக்கரும் செய்ய அஞ்சுவரே! இஃது இருபதாம் நூற்றாண்டில் நடக்கும் போர் முறை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்திப் போங்கள். தமிழ் நாட்டில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று ஓர் அரசன் இருந்தான். அவன் ஒரு நாட்டின்மீது போர் தொடங்குவதன் முன்பு பின்வருமாறு சொல்வான் :

"பசு வளர்ப்பவர்களே! உங்கள் பசுக்களைச் சாவதானமான இடத்திலே கொண்டு சேருங்கள். பசுவைப் போன்ற சாந்த குண மிக்க அந்தணாளர்களே! நீங்கள் பத்திரமான இடம் பார்த்துச் செல்லுங்கள். பெண்மக்களே! பாதுகாவலான இடம் சேருங்கள்! நோயாளிகளே, ஆபத்தில்லாத இடம் போங்கள். புதல்வரைப் பெறாத கிரகஸ்தர்களே! அரண் தேடுங்கள்! நாங்கள் யுத்தம் செய்யப் போகிறோம்."

* * *

ஒரு நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்துக்குப் பசுவே முக்கிய காரணம். யுத்தம் நேரும்பொழுது பசுக்களைக் கொன்றால் நாட்டில் பஞ்சம் வரும். மக்கள் கஷ்டப்படுவார்கள். ஆதலால் அது அறமாகாது. 'அந்தணரென்போர் அறவோர்.' கலை வளர்ப்பவர் அவரே. அவரைக் கொன்றால் கலைவளர்ச்சி குன்றும்; இலக்கிய வளர்ச்சி அழியும். ஆகவே அதுவும் அறமாகாது. பெண்டிரைக் கொன்றால் நாட்டிலே பிரஜா வளர்ச்சியிராது; ஆனந்தமிராது. நோயாளிகளைக் கொல்வதும், இன்பம் நுகராத காதலரைக் கொல்வதும் தருமமாகா. புஜபலத்துக்கு மாத்திரம் தான் போர். அதுவே சத்தியப் போர். இம்மாதிரி சொல்லி எச்சரிக்கை செய்த பின்னரே யுத்தம் தொடங்குவது தமிழ் வேந்தரின் வழக்கம். இவ்விஷயம் பின் வரும் பாட்டால் தெரியும். சங்கச் செய்யுள்களில் 'புறநானூறு' ஒன்று. அது பல சமயங்களில் பல புலவர்களால் பாடப்பட்ட நானூறு பாடல்கள் அடங்கிய ஒரு தொகுப்பு. மேலே குறிக்கப்பட்ட பாடல் வருமாறு :

" ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நற்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர் பெறாதீரும்
எம் அம்பு கடி விடுதும்
நும் அரண் சேர்மின் " என
அறத்தாறு நுவலும் பூட்கை
மறத்திற் கொல் களிற்று மீமிசைக்
கொடி விசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி.........

இந்த விதமாக ஜனங்களுக்குப் பாதுகாப்பளித்த பின் செய்வதன்றோ சத்தியப் போர்? நாகரிகத்தில் முதிர்ந்தவர் யார்? தற்கால ஐரோப்பியரா? முற்காலத் தமிழரா?

இத்தகைய தமிழ்நாடு சிறப்பிழந்து விட்டதே!

# ஸ்ரீ ஏ. நாராயணன்

"சிட்டி"

இந்திய சினிமாத் தொழிலுக்கு இது ஒரு நல்ல வருஷம். ஸ்ரீ சத்தியமூர்த்தியின் தலைமையில் அது, தன்னுடைய வெள்ளி விழாவைக் கொண்டாடப் போகிறது. ஆனால் வெள்ளிவிழா மகாநாடு கூடும் போதே ஒரு துக்க சம்பவத்தைப்பற்றி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. தென்னிந்தியாவின் சினிமா நிபுணர்களில் முதல்வரான ஸ்ரீ ஏ. நாராயணன் காலமாய்விட்டார்.

ஸ்ரீ நாராயணனைப்போல துணிச்சலும், அலக்ஷியமும் படைத்த சினிமா டைரக்டர்கள் சிலர்தான் இருக்கமுடியும். இளம் வயதிலேயே அவர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டு, தியேட்டர் நிர்வாகம் முதல் ஸ்டுடியோ நிறுவும் வேலை வரை படிப்படியாக ஒன்றுவிடாமல் கற்றுக்கொண்டார். சினிமாவின் புண்ணியக்ஷேத்திரமாகிய ஹாலிவுட்டில் நன்மதிப்புப்பெற்ற இந்தியர்களில் இவரும் ஒருவர். சினிமாத் தொழிலின் நெப்போலியன் என்று சொல்லப்படும் கார்ல் லெம்ளி என்ற நிபுணரிடம், அவருடைய யூனிவர்ஸல் ஸ்டுடியோவில் ஸ்ரீ நாராயணன் சினிமா நுணுக்க ரகசியங்களை நன்றாகக் கற்றறிந்தார்.

அமெரிக்கர்களின் அலக்ஷியத்துடன் தான் அவர் தம்முடைய தொழிலை சென்னையில் ஆரம்பித்தார். எந்த விஷயமும் அவருக்குப் பெரிதல்ல. பெரிய முதலாளிகள் நினைத்து மலைக்கும் கதைகளை ஸ்ரீ நாராயணன் ரொம்ப சுலபமாகச் சீக்கிரத்தில் படமாகத் தயார் செய்துவிடுவார். அவருடைய ஸ்டுடியோவின் தயாரிப்புகள் இல்லாவிட்டால், பல கிராமாந்தர டூரிங் சினிமாக்கள் அதிகக் கஷ்டப்பட்டிருக்கும். அவருடைய படங்களில் அநேகம் சினிமாக் கலையின் சிறந்த அம்சங்களை வெளியிடவில்லை என்றாலும், பொழுது போக்குக்கு ஏதாவது வசதிவேண்டும் என்று வேண்டிய ஜனங்களுக்கு, இவருடைய படங்கள் எவ்வளவோ உதவி செய்திருக்கின்றன.

'கோவலன்' முதலிய மௌனப் படங்களையும், 'விசுவாமித்திரர்' போன்ற பேசும் படங்களையும் தயார் செய்திருக்கிறார். சென்னையிலேயே ஸ்டுடியோ வைத்து அதிகச் செலவில்லாமல் படங்களைத் தயாரித்ததற்காக நாம் அவரைப் பாராட்டவேண்டும். 'தாராசசாங்கம்' என்னும் கதையை அவர் படமாக எடுக்க முன் வந்தது அவருடைய துணிச்சலுக்கு ஒரு உதாரணம். திடீரென்று நினைத்துக் கொண்டால் ஸ்டுடியோவைத் தன் இஷ்டம்போல் மாற்றிவிடுவார். அதனால் ஏற்படும் சிரமத்தைப்பற்றித் தயங்கமாட்டார். காட்சிகள் ஜோடிப்பதிலும் அப்படியே. "ராமானுஜர்" தயாராகும்போது, ஒரு நாள் ஸ்டுடியோவில் பேசிக்கொண்டிருந்தோம். கீழே சாக்கடை மாதிரி கொஞ்சம் ஜலம் தேங்கியிருந்தது.

"இதைத்தான் கோபிகள் ராஸக்ரீடைக்குத் தடாகமாக உபயோகித்தேன்" என்றார். ஆச்சரியம் அடங்குமுன், "அதோ அந்தப் பாதைதான் மடசாம்பிராணியில் வரும் ரஸ்தா" என்றார். படத்தில் பல மைல்கள் தூரமான ரோட்டு மாதிரி தோன்றியது ஸ்டுடியோ கேட்டிலிருந்து கட்டிடத்திற்கு வரும் வழிதான்.

ஒரு பிரபல டாக்கி கம்பெனி முதலாளி, சரித்திர சம்பந்தமான கதை ஒன்று எழுதித் தரும்படி என்னைக் கேட்டார். அது விஷயமாக மேலும் பேசும்போது, "நீங்கள் கதை எழுதுவது ஒருவருக்கும் தெரிய வேண்டாம். விளம்பரம்கூட படம் எடுக்கும்போதுதான் ஆரம்பிக்கப் போகிறோம். வெளியில் தெரிந்தால் ஒரு வேளை மிஸ்டர் நாராயணன் ஒரே வாரத்தில் படமெடுத்து விடுவார்" என்று சொன்னார். அந்த வார்த்தைகள், ஒரு சினிமாத் தொழிலாளி மற்றொருவரின் திறமைக்குக் கொடுத்த அங்கீகாரம்.

ஸ்ரீ நாராயணனின் நண்பர்களுக்கு அவருடைய பிரிவைச் சகிப்பது கஷ்டம். ஆனால் அப்பிரிவினால் துக்கத்திலாழ்ந்த அவருடைய உண்மைத் துணைவி ஸ்ரீமதி நாராயணனுக்கும் (அவர்தான் ஸ்டுடியோவின் தொனிப்பதிவாளர்) அவருடைய குழந்தைகளுக்கும் தமிழ் நாட்டின் அனுதாபம் உரியதாகும்.

# சிபார்சுச் சக்கரம்

(ஸ்ரீ. ஸேதுராமன்)

ரங்கநாத முதலியார் மிகப் பிரஸித்தமான பட்டு ஜவுளி வியாபாரி. இதன் மூலமாகவே சம்பாதிக்கத் தொடங்கி, இன்றையதினம் ஐந்து லக்ஷம் ரொக்கமாக எடுத்து விட்டார். ஜவுளி வியாபாரத்தோடு கூட, ஒரு பாங்கியின் தலைவராகவும் விளங்கினர். 'ஸேப்டி பாங்கி'யில் மூன்று லக்ஷம் வரையில் ஏகதேசமாகப் போட்டிருந்தார்.

முதலியார் தம் ஒரே மகன் கங்காதரனை, எவ்வளவோ பணம் செலவிட்டு, அவனுடைய இருபத்தைந்தாவது வயதில் ஒரு பி. ஏ. பட்டதாரி யாக்கினர். இனிமேல் அவனைச் சும்மா விட்டுவைக்க முடியுமா? 'என்னதான் பணம் காசு கொட்டிக் கிடந்தாலும், சுயமாக நாலு ரூபாய் சம்பாதித்துக் கொண்டே யிருக்கவேணும். ஆஸ்தியையே நம்பிக்கொண்டிருந்தால், அது கரைந்து குட்டிச்சுவராய்ப் போய் விடாதா?' என்று தான் முதலியாரின் 'வியாபார மனசு' நினைத்தது.

எப்படியாவது தமக்குத் தெரிந்த பெரிய மனுஷர்களிடம் சொல்லி, கங்காதரனுக்கு நல்ல உத்தியோகம் செய்து வைக்க முயற்சி செய்யலானர்.

ஒரு நாள் அவனை அழைத்துக்கொண்டு தம் அரிய நண்பர் பட்டாபிராமன் எஸ்கொயர், ஐ. ஸி. எஸ். அவர்களுடைய பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தார். 'வாருங்கள், வாருங்கள்! என்ன அபூர்வமாக இருக்கிறதே!' என்று மிகவும் உபசாரத்துடன் வரவேற்றார் ஸப்கலெக்டர் பட்டாபிராமன்.

முதலியார் தம் நண்பருடன் சிறிது நேரம் லோகாபிராமமாகப் பேசிவிட்டுச் சொந்த விஷயத்துக்கு வந்தார். "இவன் நம்ம பையன்" என்றார் கங்காதரனைச் சுட்டிக்காட்டி.

"ஓஹோ! அப்படியா?"

"பி. ஏ. பாஸ் செய்திருக்கிறன்..."

"ஸரி..."

"வீட்டிலேயே எத்தனை நாள் சும்மா இருப்பது?"

"ஆமாம்...ஏதாவது மேலும் மேலும் படித்துக் கொண்டேதான் இருக்கணும்...."

"அதுவும் அவசியந்தான்......உத்யோகம் என்று ஒன்று ஏற்பட்டால்தான்..."

"வாஸ்தவம்தான்....!"

"அதான் உங்களிடம் வந்தேன். பையனை உங்கள் கையில் விட்டுவிட்டேன். எப்படியாவது ஒரு உத்தியோகம் பண்ணி வைக்கவேண்டியது உங்கள் பொறுப்பு..." என்றார் முதலியார்.

"அதற்கென்ன? இதுகூடவா செய்ய முடியாது? இந்தச் சிறிய விஷயத்துக்காக நீங்களே நேரில் வந்திருக்கும்போது, நான் செய்வதற்கு என்ன தடை!" என்று உச்சி குளிரப் பேசினர் ஸப்கலெக்டர்.

முதலியாருக்குப் பெரிய பாரம் இறங்கினற்போல இருந்தது. பிறகு விடை பெற்றுக்கொண்டு போகும் போது "பையனை எப்போது மறுபடியும் வரச் சொல்ல?" என்று கேட்டார்.

"சாயந்திரம் வந்து பார்க்கச் சொல்லுங்களேன். எனக்கும் சாவகாசமாக இருக்கும்" என்றார் பட்டாபிராமன்.

* * *

சாயங்காலம் கங்காதரன் ஸப்கலெக்டர் பங்களாவுக்குச் சென்றான். அப்போதுதான் அவர் கச்சேரியிலிருந்து திரும்பி வந்து அயர்ச்சியாக நாற்காலியில் சாய்ந்துக் கொண்டிருந்தார்.

"வாப்பா, உட்காரு" என்றார். சற்று நேரம் கழித்து "வேறெங்கும் போக வேண்டிய ஜோலி இல்லையே!" என்று கேட்டுவிட்டு மறுபடி மௌனத்தில் ஆழ்ந்தார்.

"நாளைக்குக் காலமே டிரஸ் பண்ணிக் கொண்டுவா. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் எனக்கு ரொம்ப வேண்டியவர். உன்னையும் அழைத்துக்கொண்டுபோய் கட்டாயம் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன்.

நான் சொன்னால் நிச்சயமாகக் கேட்கக் கூடியவர்..." என்றார். கங்காதரனும் "வருகிறேன், ஸார்" என்று விடைபெற்றுத் திரும்பி வந்தான்.

அதேபோல், மறுநாட்காலை ஜில்லா ஜட்ஜிடம் கங்காதரனுடைய விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவர் கண்டிப்பாக ஏதாவது வேலை பண்ணிவைப்பதாக ஒப்புக்கொண்டார். ஸப்கலெக்டரின் தோள்களிலிருந்த வேதாளம் ஜில்லா ஜட்ஜியின் தோள்களுக்கு மாறிற்று.

கங்காதரன் ஜட்ஜை மறுமுறை பார்க்கச் சென்றான். அவர் சொன்னார். "எனக்கு உடம்பு சரியில்லை. இல்லாவிட்டால் நானே நேரில் வருவேன்......அதனால் ஒன்றும் பாதகமில்லை......என் தம்பிதான் அவர். ஸன்லைட் மோட்டார் கம்பெனியில் மானேஜராக இருக்கிறார். அங்கே அறுபது ரூபாயில் ஓர் உத்யோகம் உனக்குக் கிடைக்கும்படி செய்கிறேன்.... இந்த லெட்டரைக் கொண்டுபோ...உனக்கு வேண்டிய தெல்லாவற்றையும் கவனிப்பார்...." என்று சொல்லி ஒரு கடிதம் எழுதித் தந்தார். கங்காதரனும் மறுநாட்காலை, தான் போய்ப் பார்ப்பதாகச் சொல்லிவிட்டு, ஜட்ஜிடம் விடைபெற்றுக் கொண்டான்.

* * *

"அருமைச் சந்துருவுக்கு,

இதைக்கொண்டுவரும் பையன் எனக்கு மிகவும் வேண்டியவன். பி.ஏ. பாஸ் செய்திருக்கிறான். அவனுக்கு எப்படியாவது உன் கம்பெனியில் வேலை கொடுக்கவேண்டும். என்னிடம் உனக்கு உள்ள அன்பை வெளிக்காட்டவேண்டுமானால் இந்த விஷயத்தில் அனுகூலம் செய். மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கொடுத்தால்போதும். பையனிடம் எனக்கு மிகவும் சிரத்தை உண்டாகையால் இவ்வளவு தூரம் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
கோபிநாத்."

இந்தக் கடிதத்தை சந்திர சேகரர் படித்தவுடன், கங்காதரனை ஒருதடவை ஏற இறங்கப் பார்த்தார்.

"ஆபீஸ் முடிந்ததும், சாயந்திரம் வந்து பார். என் வீட்டு விலாசம், 'பாரி வில்லா,' நுங்கம்பாக்கம் ஹைரோட்." என்று சொல்லிவிட்டுத் தம் வேலையைக் கவனிக்கலானார்.

சாயங்காலம் அவன் சந்திரசேகரர் 'வில்லா' வுக்குப் போய்ச் சேர்ந்தான். அவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார் சேகரர். தம்முடைய தமையனாருக்கு வேண்டிய பையனல்லவா? தம் வீட்டில் டிபன் சாப்பிடும்படி வற்புறுத்தினார். மிகவும் அன்போடு அவனுடன் பேசிக்கொண்டேயிருந்தார் சற்று நேரம்.

மணி ஆறடித்தது. "போகலாம் வா! அப்புறமானால் அவர் வெளியில் போய் விடுவார்" என்று சொல்லிவிட்டு "டேய், காரைக் கொண்டு வந்து நிறுத்து" என்று டிரைவருக்கு உத்திரவு போட்டார்.

இருவரும் காரில் ஏறிக்கொண்டனர். கார் போய்க்கொண்டே யிருந்தது. 'ஸேப்டி பாங்கி' வாசலில் வந்து நின்றதும் கங்காதரனுக்கு "நம் தகப்பனாரிடம் எனக்குத் தம் கம்பெனியில் வேலைசெய்து கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கத் தான் வந்திருக்கிறார்" என்று தோன்றியது.

சந்திரசேகரர் இறங்கி பாங்கியின் ஏஜண்ட் இருக்கும் அறைக்குச் சென்றார். கங்காதரன் பின்னடியே தங்கிவிட்டான். தனக்கு ஏஜண்டிடம் என்ன வேலை என்று நினைப்பு.

உள்ளே சென்ற சந்திரசேகரர் என்ன பேசிக்கொண்டிருந்தார் என்பது அவனுக்குத் தெரியாது. சற்று நேரம் கழித்து அவர், 'மிஸ்டர்...' என்று அவனைக் கூப்பிட்டுக்கொண்டே வந்தார். அவன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு, "இவன் தான் ஸார், நம்ம பையன்... உங்கள் பொறுப்பில் விட்டுவிட்டேன் எப்படியாவது..." என்று சொல்லிக் கொண்டே ஏஜண்டின் அறைக்குள் நுழைந்தார்.

ஏஜண்ட் ரங்கசாமிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"அடேடே...நம்ம பாங்கி டைரெக்டர் முதலியார்வாளுடைய பிள்ளை ஸார் இவன்!" என்று அவர் சந்திரசேகரரின் தொடையில் தட்டிவிட்டு, வந்த சிரிப்பை அடக்கமுடியாமல் சிறிது நாழிகை தவித்தார்.

# மாறுதல்

(ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம்)

"அண்ணு போய்வருகிறேன். அதோ வண்டியும் புறப்பட்டுவிட்டது. என்ன அண்ணு பேசாமல் இருக்கிருய்? இங்கே பார். அடிக்கடி கடிதம் எழுதுகிறேன். ஐயோ! என்ன அண்ணு! வாய் திறந்து பேசு. எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிருர்கள். என்ன இது? இப்படி மௌனமாக நிற்காதே. என்னைப் பார்க்கமாட்டாயா? அண்ணு! இப்படி சிறு குழந்தை மாதிரி? அவர்களிடமெல்லாம் விடைபெற்றுக்கொள்ள வேண்டாமா? இப்படி நிமிர்ந்து பார்!" என்ற வார்த்தைகளைச் சொல்லும் போதே அவள் கண்களில் ஜலம் நிறைந்துவிட்டது. அவன் தலையை நிமிர்த்தி அவளை ஒருமுறை பார்த்தான். அப்போது அவனுடைய கண்களில் அவள் என்னத்தைக் கண்டாளோ, தன்னை மீறி வாய் விட்டு "அண்ணு" என்று கத்திவிட்டாள். பெற்ற தாயும்கூட பேச்சற்று நின்றுவிட்டாள். பார்த்திருந்தவர்கள் எல்லாம் அப்படியே உணர்ச்சி வசப்பட்டு நின்றிருந்தார்கள். பெண்கள் கூட்டத்திலிருந்து இழைந்த குரலில், ஆனல் கணீரென்று, ஒருத்தி சொன்னுள்: "என்ன இருந்தாலும் பெண்மனசு கேட்குமா? அம்மா! ஆனுலும் பெற்றோர்களிடம்கூட இல்லாத இத்தனை பிரியம் என்னவோ?" அருகில் நின்றிருந்தவள் சொன்னுள்: "போனல் இனி வருவது கிடையாதா? பாவம் அப்படி யாரம்மா அவளைப்போல் சகோதரனிடம் உயிராக இருக்கிருர்கள்?"

* * *

"சந்திரா! எழுந்திரு வெளியில் போவோம். கூண்டில் அடைபட்டுக் கிடைப்பதுபோல இந்த இருட்டறையில் உட்கார்ந்துகொண்டு என்ன யோசனை செய்கிருய்?" நண்பனது கேள்விக்கு சந்திரன் பதில் அளிக்கவில்லை. அவனுக்கு எங்குமே போக இஷ்டமில்லை. தன் தங்கையற்ற உலகம் சுத்த சூன்யமாகவும் வரண்ட பொட்டல் காடாகவும் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. கேட்ட கேள்விக்குக்கூட பதில் சொல்லாமல் தன்னை மறந்து சிந்தனையில் மூழ்கி யிருந்தான். அவன் நெஞ்சில் பிரிவின் ஏக்கம் குரலெழுப்பி ஏற்ற ராகத்தில் கீதம் அமைத்துக்கொண்டிருந்தது. "அடிக்கடி கடிதம் எழுதுகிறேன். என்ன அண்ணு பேசாமல் இருக்கிருய்?" என்ற வார்த்தைகள் நுரை மொட்டுகள் போல கிளம்பிக் கிளம்பி அமிழ்ந்து கொண்டிருந்தன.

"என்னடா, நான் கேட்பது தெரியவில்லையா?" என்று மறுபடியும் நண்பன் கேட்டான். உள்ளேயிருந்து அவன் தாயார் சொன்னுள். "பெற்றவளுக்கு இல்லாத அக்கரை அவனுக்கு வந்துவிட்டதப்பா. இன்னிக்கு சாப்பிடக்கூட இல்லை." ஆனுல் அவள் சொன்னது அவர்கள் காதில் விழவில்லை.

"எனக்கு உடம்பு சரியில்லை" என்ற எதிர்பாராத பதிலைக் கேட்டுத் திடுக்கிட்டு தலை நிமிர்ந்து பார்த்தான் நண்பன். என்றுமே இப்படிச் சொன்னது கிடையாதே. மனது சரியில்லாவிட்டால் அதை உடம்பு சரியில்லை என்று சொல்வது புதுவழக்கமாக்கும் என்று நினைத்துக்கொண்டே வெளியே எழுந்து போய்விட்டான் சிநேகிதன்.

இரவு பத்துமணி சமயமிருக்கலாம். திறந்திருந்த ஜன்னலருகே சந்திரசேகரன் வானக்கோடியில் கும்பலாகக் கூடி மங்கியிருந்த நட்சத்திரக் குவியலைக் கவனித்துக்கொண்டிருந்தான். குளிர்ந்த காற்று ஜில்லென்று வீசிற்று. எதிரிலிருந்த பூவரசமர இலைகள் மிருதுவாக ஓசை செய்து, அவன் உள்ளத்தில் பூத்திருந்த சோக நெருப்பைக் கிளறிவிட்டன. சற்று நேரத்தில் உஷ்ணம் உள்ளே எரிக்கத் தொடங்கியது. அந்தக் கனல் ஜ்வாலையைப் பொறுக்காது அறையில் உலாவ ஆரம்பித்தான். அவன் மனம் தனிமை கொண்டு தத்தளித்துப் புலம்பிற்று. "அவளும் கூட்டத்தில் ஒருத்தியாகக்

கலந்துவிட்டாள். அதோ பார், அந்த நட்சத்திரக் குவியலிலே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சுடர்கள்கூட ஒரு சில மங்கிப் பிரகாசம் குன்றிவிடுகிறதல்லவா? இனி அதைப்போலத்தான் அவளுமா?"......

அந்த அமைதியான இரவிலே தூங்கிக்கொண்டிருக்கும் அச் சிறு கிராமத்தின் சின்ன அறையிலே தன்னந்தனியாக அவன் மட்டும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். சற்றைக்கொருதரம் கெட்ட கனவு கண்டு விழித்துக்கொள்ளும் வாசற்புறத்து நாய்கள் மட்டும் கிராமத்தின் தூக்கத்தைக் கலைத்துக்கொண்டிருந்தன.

"சந்திரா!" அவன் சிரித்தான். "உள்ளே வா. லக்ஷ்மி! ரெட்டி பட்டி ஊர் எப்படி? குண்டக்கல்லில் இறங்கி எத்தனை மைல் போகவேண்டுமென்று சொன்னாய்? ஆறு மைலா? ஆமாம், ஆறு ஊருக்குள்ளேயே வளைந்து செல்வதாகச் சொன்னாயே? அப்படியானால் நீர் கொழித்துக்கொண்டுதானிருக்கும்........" "என்ன இது! சை! என் கண்களுக்கெதிரே தெரிவதெல்லாம் சொப்பனத்தின் சாயைகளா? மனதின் கொந்தளிப்பா ஓலமிடுகிறது? எனக்குள் நானே பேசிக்கொள்கிறேன். பேசிக்கொண்டே நடக்கிறேன். எனக்கு பித்தா பிடித்துவிட்டது?"

சந்திரசேகரன் மெத்தையின்மீது உட்கார்ந்தான். அருகிலிருந்த தலையணையைப் பார்த்தான். எத்தனை இரவுகளில் தங்கையுடன் இங்கு உட்கார்ந்து சேர்ந்து படித்திருக்கவேண்டும். அவள் இந்த இடத்தில் ஜன்னலுக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்துகொண்டு படிப்பாள். மறுபடியும் மனதிலிருந்து ஒரு குரலெழுந்தது. "சந்திரா! இச் சிறு பிரிவுக்காக இத்தனை தூரம் மனம் பிரமை கொள்ளவிடலாமா? இன்னும் தடைகள், தடங்கல்கள், பிளவுகள் ஏற்பட்டுவிட்டால்............" சுற்றுமுற்றும் பார்த்தான். ஆனால் யாரிருக்கிறார்கள்?

* * *

"கடிதத்தை போட்டுவிடு, சந்திரா!"

"எந்தக் கடிதம்?"

"என்ன, ஞாபகம் இல்லையா?"

"அடடா மறந்து வைத்துவிட்டேன்."

"சரி போய் எடுத்துக் கொண்டு வா. வீடு கிட்டத்தில் தானே இருக்கிறது? இல்லாவிட்டால் நான் போய் எடுத்துக் கொண்டு வரட்டுமா?"

"வேண்டாம். நேரமாகிறது. கடற்கரைக்குப் போவோம் வா."

நண்பர்கள் இருவரும் தனியாக ஓரிடத்தில் போய் உட்கார்ந்தார்கள். கடல் என்றும் போல் முழங்கிக்கொண்டுதானிருந்தது. சந்திரசேகரன் குமுறி விழும் வெள்ளலைகளையும், வெகு தூரத்திற்கப்பால் மூடுபனிபோல மாலை இருளில் மயங்கிக் கிடக்கும் கடல் நீரையும் கவனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நண்பனுக்கு இதெல்லாம் விளங்காத விடுகதையைப்போலிருந்தது. காலம் செய்து விடுகிற மகத்தான மாறுதல்களில் இதுவும் ஒன்று? அப்படிப்பட்ட அன்புகூட அறுபடுகிறதுமுண்டா? முன்பிருந்த ஆர்வத்தில் ஆயிரத்திலொரு பங்குகூட இல்லையே! கண்ணினுமினிய தங்கை கசந்துவிட்டதேன்? நண்பன் பொறுமையுடன் அமைதியாகக் கேட்டான்.

"சந்திரா"

"என்ன?"

"ஒரு சந்தேகம்"

"கேளேன்!"

"நீ உன் தங்கைக்கு........" தயங்கி நிறுத்தினான். சந்திரசேகரன் உற்று நோக்கினான். பிறகு மெதுவான குரலில் "அவளுக்கென்ன?" என்றான். மங்கியிருந்த அந்தக் குரலிலே ஜீவிய ஆரம்பத்திலிருந்து வந்த இளமையின் அன்பு விரிந்து மணம் வீசிற்று? அல்லது சோகத்தின் ஜ்வாலை தஹித்துத் தணிவுடன் வந்ததா? இதை நண்பனால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"கடிதம் எழுதுவதில்கூட இவ்வளவு அசிரத்தையா? எழுதிவைத்திருந்ததைக் கூட......"

சந்திரசேகரன் பேச்சற்று மேலும் கீழும் விழும் அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். பொங்கிவிழும் அந்தப் புது அலைகளுக்குள்ளிருந்து அவன் தங்கை கையெடுத்து வருந்தி அழைப்பதைப் போலிருந்தது அவனுக்கு.

* *

வீட்டிலுள்ள சாமான்களை எல்லாம் வண்டியில் ஏற்றியாய்விட்டது. அவன் மனை

வியும் போய் வண்டியில் ஏறிக்கொண்டாள். இரண்டு வருஷமாய்க் குடியிருந்த பட்டணத்து வீட்டை ஒரு முறை அண்ணாந்து பார்த்தான் சந்திரசேகரன். அந்த புழுதியடைந்த கட்டிடம் வெறித்துப்பார்த்ததைப் போலிருந்தது. முன்பு கிராமத்தை விட்டுப் பிரிந்து வரும்போது தன் வீட்டில் கண்ட களை ஒன்றும் இங்கில்லை. மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு, வண்டிக்குப் பின்னுல் நடந்தான். அப்போது எதிரில் வந்த தபால்காரன் அர்த்தமற்ற சிரிப்புடன் "ஊருக்குப் போனுல் என்னை எங்கே நினைக்க போகிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ஆவலுடன் பிரித்தான். தங்கை எழுதியிருந்தாள்:

"........சென்ற சில நாட்களாக உன்னிடமிருந்து வரும் கடிதங்களைச் சிரத்தையுடன் சிந்தித்துப் படிக்கும்படி செய்துவிட்டாய். நான் இதைப்பற்றியே மீண்டும் மீண்டும் யோசித்தேன். எத்தனையோ இரவுகளில் ஆழ்ந்து சிந்தித்தும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. என்னை நோக்கி எழுந்த அன்புக்குரலை யாராவது கை நீட்டி அடைத்து விட்டார்களா? அல்லது உன்னுடைய பட்டண வாசத்தின் பலன் திரும்பி எனக்குப் பலன் அளித்து விட்டதா? தீர்க்கமாக என்னுல் இப்போது முடிவுகட்ட முடியவில்லை. ஆனுல் நேற்றைய கடிதத்தில் சிறிது நம்பிக்கையையும் நிச்சயத்தையும் ஏற்படுத்தி யிருக்கிறுய். இன்னும் எவ்வளவோ விஷயங்களைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருக்கிறது. இன்னும் நாலு நாளில் நானும் என் கணவரும் புறப்பட்டு வருகிறேம். நீ நம்முடைய ஊருக்கே மறுபடியும் போவது கேட்டுப் பரமசந்தோஷம்... ......"


போனவாரம், அதற்குமுந்தி பல நாட்களுக்குமுன் வந்த கடிதங்களை யெல்லாம் எடுத்துப்பார்த்தான். எல்லாம் வித்தியாசமற்று ஒரே மையில், ஒரேவிதக் கடிதத்தில், ஒரே கையினுல் எழுதப்பட்டிருந்தது தெரிந்தது. "அவள் எப்பொழுதும்போல்தான் இருக்கிறுள். ஆனுல் நான்......நான் தான்" என்று முனங்கிக் கொண்டே வண்டிக்குப் பின்னே வேகமாக நடந்தான்.

# இரண்டு விசேஷக் கோவில்கள்

("விசாரதன்")

தஞ்சாவூர் ஜில்லாவிலே திருப்புன்கூர் என்ற ஊரிலே ஒரு சிவன்கோவில் இருக்கிறது. அங்கே சிவலிங்கத்திற்கு முன்னுள்ள நந்தியின் முகமானது மண்டபத்தின் மேல் தளத்தை முட்டுவது போல அவ்வளவு உயரமுள்ளதாக இருக்கிறது. இதைக் கண்டே நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளைப் பாடிய ஸ்ரீ. கோபாலகிருஷ்ண பாரதியார் 'மலைபோலொரு மாடு படுத்திருக்கிறது' என்றுர். இந்த மலைபோன்ற நந்தி, ஸந்நிதிக்கு நேராக அமைக்கப்படவில்லை. முன்பு இப்பெரிய நந்தி விக்கிரஹம் சிவலிங்கத்திற்கு நேர் எதிரே அமைந்திருந்ததாகவும், பக்த நந்தன் ஹரிஜனன் ஆதலால் கோபுர வாசலில் நின்றே தரிசனஞ்செய்ய விரும்பினபோது, நந்தி மறைத்ததால் அவன் வருத்தப்பட்டதாகவும், அவன் வருத்தத்தைக் கண்ட சிவபிரான் நந்தியைச் சற்று விலகியிருக்கும்படி வேண்டிக்கொண்டதாகவும், அதனுலேதான் இவ்வாறு நந்தி ஸந்நிதியைவிட்டுச் சற்று விலகியிருக்கிறதாகவும் தெரிகிறது.

மற்ருெரு விசேஷக் கோவில் திருநெல்வேலி ஜில்லாவிலே தென்திருப்பேரை என்னும் ஊரிலே உள்ளது. அந்தப் பெருமாள் கோவிலில் பெருமாள் உபய நாச்சிமார்களுடன் உன்னதமான ஆஸனத்தில் வீற்றிருக்கிறுர். பெருமாள் கோவிலிலுள்ள கருட விக்கிரஹம் ஸந்நிதியினின்றும் சற்று விலகியிருக்கிறது. அந்த ஊர்ப் பிள்ளைகள் ஸந்நிதியிலேயுள்ள கருட மண்டபத்திலே எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருந்தார்களாம். அவர்களுடைய விளையாட்டு ஆரவாரமானது, வேத கோஷத்தோடும், திருவிழாக்களின் இரைச்சலோடும் பெருமாள் காதிலே படவே, குதூகலத்தோடு ஆரவாரஞ் செய்து விளையாடும் பிள்ளைக் குழாத்தைக் காண வேண்டுமென்று பெருமாள் விரும்பினுராம். திருப்புன்கூர் நந்தியைப் போலவே, தென்திருப்பேரைக் கருடனும் சற்றே விலகி நின்ருனும்.




## பூர்வ கதை

பெரிய பணக்காரரான **கண்டிராக்டர் லம்போதர முதலியார்** மனைவியை இழந்தவர். தன் தாயார், பிள்ளை, மருமகள்—இவர்களுடன் வசித்துவந்தார். முதலியாரின் தாயார் **தேவானையம்மாள்** தாயற்ற குழந்தைகள் இருவரையும் அன்பாய் வளர்த்து வந்தாள். மருமகள் **புனிதவதியின்** தாயார் சிறுவயதிலேயே காலமாய் விட்டபடியால் அவளை வளர்க்கும் பொறுப்பு முதலியார் பேரில் விழுந்தது. புனிதவதியும் முதலியார் புத்திரனான தணிகைவேலனும் ஒரே வயதினர். சேர்ந்தாற்போல் காலேஜுக்குப் போவார்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாள்.

இந்த சந்தோஷமான குடும்பத்தை விட்டு விட்டு அடுத்த வீட்டுக்கு வருவோம். அது **பாப்பாத்திப்பம்மாள்** வீடு. சிறு வயதில் பாப்பாவை லம்போதர முதலியாருக்குக் கொடுப்பதாயிருந்தது. ஆனால் பாப்பாவின் தாயார் மறுத்துவிட்டாள். பாப்பாவின் துரதிருஷ்டம் எங்கே போயிற்று? கடைசியில் அவள் ஓர் குடிகார ஜாகீர்தாருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானாள். பாப்பாவுக்கு ஒரு பெரிய புதல்வனும் இரு சிறு குழந்தைகளும் உண்டு. **சிவக்கொழுந்து** என்பவன் அந்த மூத்த சற்புத்திரன்! அவன் போகாத சினிமாக் கொட்டகை பாக்கியில்லை! குதிரைப் பந்தயமில்லை! இதனால் பாப்பா மனம் புழுங்கினாள்.

புனிதவதியின் தாயும் பாப்பாவும் ஒரே வயதினர். இணைபிரியாமல் இருந்தவர்கள். ஆகையால் பாப்பா புனிதத்தினிடம் அன்பாயிருந்தாள். புனிதத்திற்கு பாப்பா என்றால் உயிர்.

புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாளல்லவா? ஆனால் தணிகைவேலன் தன்னைக் காதலிக்கிறானா என்பதை அவளால் அறிய முடியவில்லை. ஒருநாள் புனிதம் ஓர் இன்பக் கனவுகண்டாள். தனக்கும் தணிகுவுக்கும் கலியாணம் ஆகிவிட்டதுபோல் கனவில் கண்டு இன்பமடைந்தாள்.

மறுநாள் அவள் கட்டியிருந்த மனக்கோட்டை இடிந்து விழுவதை உணர்ந்தாள். டென்னிஸ் விளையாடிவிட்டு வந்த தணிகு தோட்டத்தில் சண்பக மரத்தடியில் தலையைக் கோதிக்கொண்டு உல்லாசமாய் உட்கார்ந்திருந்த புனிதத்தைச் சந்தித்தான். ரகஸ்யமாக ஒரு கேள்வி கேட்க விரும்பினான். அப்போது புனிதத்தின் கன்னங்கள் சிவந்தன. என்ன கேட்கப்போகிறான்? கல்யாண விஷயத்தைதான் கேட்கப்போகிறான்! வேறு என்ன ரகஸ்யம் புனிதத்திடம் இருக்கப் போகிறது? ஆதலால் அவள் நாணமடைந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?

தணிகு அவன் கலியாண விஷயத்தைப் பற்றித்தான் கேட்டான். ஆனால் அது எவ்வளவு எதிர்பாராத திகைப்பைக் கொடுத்தது புனிதத்திற்கு? புனிதத்தின் வகுப்புத் தோழியான சிவகாமியை தனக்கு அப்பா நிச்சயம் செய்திருக்கிறாரென்றும் அவள் எப்படிப்பட்டவளென்றும் அவன் புனிதத்திடமே கேட்டால் திகைப்பை உண்டாக்காமல் என்னசெய்யும்? இயந்திரம்போல் புனிதம் ஏதோ பதில் சொல்லிவைத்தாள். தணிகு போனதும், புனிதம் வருத்தம் தாங்காமல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள்.

அந்த சமயத்தில் முதலியார் அங்கே வந்து தணிகுவின் நிச்சயதார்த்தத்திற்கு எல்லோருடன் வரும்படி அவளை வற்புறுத்தி அழைத்துப் போனார். அன்றிரவு புனிதவதிக்குத் தூக்கமே வரவில்லை. துக்கம் தாங்காமல் விம்மி அழுதாள். தணிகைவேலன் அவள் அறைக்கு வந்து அவளைத் தேற்றினான். காலஞ்சென்ற தாயாரின் ஞாபகம் வந்ததால் புனிதம் வருந்துகிறாள் என்று எல்லோரும் நம்பினார்கள். உண்மையான காரணம் புனிதத்தைத்தவிர வேறு யாருக்கா

வது தெரியுமா? ஆம்; அதனுடைய சாயை தணிகைவேலன் ஹிருதயத்தில் கூடப் பிரதி பலித்தது. இல்லாவிட்டால் அவன் ஏன் படுக்கையில் படுத்துக் கொண்டு தூக்கம் வராமல் வேதனைப்படவேண்டும்? அவள் துயரம் அவன்மனதை ஏன் வாள்கொண்டு அறுக்க வேண்டும்?

(இனிமேல் படிக்கலாம்)

5

## உதய ராகம்

தணிகு வயதிலும் மூத்தவன்தான். ஆனால் என்ன?......... பெண் மனம் எப்படிப் பட்டதென்று புரிந்துகொள்ள அவனுக்கு சக்தியுமில்லை, புரியவுமில்லை. அவன்தான் என்ன செய்வான் பாவம்!

புனிதம் அன்றிரவின் பிற்பகுதியிலேயே தனது விடுதலைக்கு—தன் துயரத்தை நீக்க—ஒரு வழி கண்டு பிடித்து விட்டாள். பரபரப்புடன் எழுந்தாள். தணிகு படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள். தணிகு அப்பொழுதுதான் கண் அயர்ந்திருந்தான். அடிமேலடி வைத்து, அரைத் தூக்கமும் விழிப்புமாயிருந்த அவனை எழுப்பலாமாவென்று எண்ணியவளாய்ச் சற்றே தயங்கினாள்.

மணி மூன்று. விடியற்காலை. சாமக்கோழி கொக்கரகோவென்று கூவிற்று. நிலவினால் தூங்காமல் திரியும் காக்கைகளில் சில காகாவென்று கூவி சிறகுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு செல்லும் ஓசை கேட்டது.

"தணிகு! தணிகு!" என்று மிகுதியும் நடுங்கிய குரலில் மெதுவாய்க் கூப்பிட்டாள் புனிதம். அவன் அற்புதமான கனவு கண்டு கொண்டிருந்தான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது. சற்று நிறுத்தினாள். மறுபடி அவனை உற்று நோக்கினாள். "சரிதான், தற்கொலை செய்து கொள்வதனால் என்ன உபயோகம்? உயிரை இழப்பதைவிட, ஏன் வாழ்நாளைப் பிறருடைய சேவையில் செலவு செய்யக்கூடாது?......................இந்த நிலைமையில் நான் இறந்து போனாலும், மாமாவுக்கும் தணிகை வேலனுக்கும் அபகீர்த்தியும் துன்பமுமே தவிர வேறு என்ன நன்மை? அவர் மனம் தான் என்ன பாடு படும்? இல்லை, இறந்து விடுவதென்றே வைத்துக்கொள்ளுவோம். இந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதாயெண்ணி இறந்தால், மரணத்திற்குப் பிறகு இதைவிட உயர்நிலை அல்லது அமைதி இருக்கலாமென்கிற மூட நம்பிக்கை தானே? மரணத்திற்கு பின்... ...என்ன? அது ஒருவருக்குமே விளங்காத விடுகதை. அவரவர் தங்களுக்குத் தோன்றுகிறபடி வேதாந்தமோ, சமாதானமோ சொல்லுகிறார்கள். இதைவிடக் கடுமையான நிலைமை, அங்கே, மரணத்திற்குப் பிறகு ஏன் இருக்கக்கூடாது? அப்படி இருக்கும் பக்ஷத்தில் உயிர் துறப்பதனால் என்ன லாபம்? ஆசையினால், பற்றுதலினால் தானே துன்பம்? உலகைத் துறப்பதைவிட, உலகின்மேல் நமக்குள்ள பேராவலை, அதை அடைய வேண்டும் என்கிற ஆவலையே, துறந்துவிட்டால்?" என்று எண்ணும்பொழுது, அந்தக் கனவு, அதாவது சிங்களத்தீவிலே தானும் அவனும் ஓடியதையும் கடைசியில் தான் வெற்றி பெற்றதையும் எண்ண அவள் முகத்தில் இளநகை அரும்பிற்று. காற்றினால் மோதுண்ட அருகிலுள்ள கோயில் துவஜஸ்தம்பத்தின் மணிகள் கலகல வென்று ஒலித்தன. "தணிகு! தணிகு!" என்ற குரல் மிகவும் மெதுவாக அவள் வாயினின்றும் எழுந்தது.

"புனிதம்! நீயா நிற்கின்றாய்? என்ன? என்றுமில்லாத புன்னகை முகம் இந்த விடியற்காலையில்? அப்பாடா! எனக்குப் பெரிய பளுவு விட்டது. நீ அழுத அழுகை என் நெஞ்சையே துளைத்து விட்டது. இரவு முழுவதும் நீ தூங்கவே இல்லையா? உட்காரு. நீ நின்றது கனவு போலவே தோன்றிற்று. என்ன அற்புதம்? ஒரு அதிசயமான கனவு. நீ வெண் சிறகுகளுடன் பறந்து போனதுபோல. புனிதம்! அந்த அதி ஆச்சரியமான கனவிலிருந்து ஏன் விழித்தோமென்று கூடத் தோன்றிவிட்டது? என்ன ஆச்சரியம்! உண்மையில் நீ பறந்து, எங்களைப் பிரிந்து செல்லுவதுபோல் தோன்றி மயிர் கூச்செறிந்தது. ஆனால்" என்று வியப்பும் திகைப்பும் கலந்த குரலில் கூறி, சற்றே நிறுத்தினான் தணிகு.

மேலும் தொடர்ந்து சொல்வதைக் கேட்க விரும்பாதவள்போல் "சரிதான்! சரியான தூக்கமில்லாமையாலும், பித்தம் அதிகமாவதனாலும் தான் கனவுகள்

காண்கிறேமென்று நீயே அடிக்கடி சொல்லுவாயே? நீ நெடுநேரமாய்த் தூங்கவேயில்லே. ஏதோ உளறினற்போல் கேட்டது. அதனுல்தான் எழுந்து வந்தேன். சரி, நீ தூங்கு'' என்று சொல்லியவளாய்த் திரும்பினுள் புனிதம்.

"'தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்' என்பார்களல்லவா? நீ அறியாவிட்டாலும், உன் அந்தராத்மா ஒருவாறு அறிந்துதானிருக்கிறது. அது கனவா? அல்ல. என் மன நிலே உன் மனதுள் பிரதிபலித்தது. தணிகு! அதைக் கண்டு கொள்ள உன்னுல் முடியவில்லேயே?'' என்று எண்ணினுள். அவள் முகத்தில் சோகம் கலந்த ஒரு ஏளனப் புன்னகை ஒரு விநாடி தோன்றி மறைந்தது. "தொப்'' பென்று தன் படுக்கையில் உட்கார்ந்தாள் புனிதம். அந்நில வொளியில் முகத்திற் புன்னகையும் சாந்தமும் ஒருங்கே தவழ, கண்மூடி, மௌனியாய் நெடுநேரம் சாய்ந்திருந்தாள் புனிதம்.

மேளக்கார வெங்கடாசலம் 'நொய்' என்று ஒத்து ஊத ஆரம்பித்தான். அவன் மகன் அங்கப்பன் தன்னுலியன்ற வரையில் அபசுரத்தை வாரி வாரிக் கொட்டித் தாராளமாய் உதயராகம் வாசிக்க ஆரம்பித்தான்.

"விடிந்தும் விட்டது'' என்ற சொற்ருெடர் பெருமூச்சுடன் கலந்து அவள் வாயினின்றும் எழுந்து காற்றுடன் கலந்தது.

6

## தேவானேயம்மாள் கோபம்

"அடே லம்போதரா! நானும் சொல்லிக் கொண்டே தானிருக்கிறேன். நீ அவள் விஷயத்தில் பராமுகமாய் இருப்பதாய் ஊரார் சொல்வதற்கு ஏன் இடங் கொடுக்கவேண்டும்? ஏதோ காய்க்கிற நாளேயிலே காய்க்கவேண்டும். பூக்கிற நாளேயிலே பூக்கவேண்டும். புத்தியறிந்த பெண்ணே எத்தனே வருஷம் தான் வீட்டிலேயே வைத்திருப்பது? ஏதோ நான் ஒரு கட்டை இருக்கும்பொழுதே ஒரு தாலியைக் கட்டிவிட்டால் பிறகு எப்படியாவது போகட்டும். அவளேவிட மூன்று வயது இளேயவள் சிவகாமி. இதற்குள் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகி விட்டாள். இவளுக்குமட்டுமென்ன இப்பிடிவாதம்?......

"இப்படியே இருந்து விடுகிறேன் என்கிருள். நீயும் ஒன்றும் சொல்லுவதில்லே. அதெல்லாம் சரியான காரியமா? இப்பொழுது சொல்லிவிடலாம். முட்ட முடிய நடந்து நாலு பேர் தோளில் போகிறவரையில் நடந்த பிறகல்லவா? இதெல்லாம் வெறும் அதனப் பிரசங்கித்தனம். நானும் போய்விட்டால் ஏனென்று கேட்பாருமில்லே.......

"வீட்டிலேயோ அவளும் சிறியவள். இவளும் சிறியவள். நான் என்ன, கல்பகோடிகாலம் வரம் வாங்கி வந்திருக்கிறேனு? பச்சைப் பசுக்க வாழவேண்டிய என் கண்மணிகளெல்லாம் பாதி வயதிலே படை எடுத்துப் போனுர்களே! நான் இருப்பது என்ன சாசுவதம்? வீடு போ போ என்கிறது, காடு வா வா என்கிறது. ஏதோ, கண்ணுள்ளபோதே ஒரு வரனே நிச்சயம் செய்து விடேன். நீயே நேரில் அவளேக் கேள். நான் சொன்னுல் பக்கத்து வீட்டுப் பாப்பாத்தியை உபமானம் சொல்லுவாள். உலகத்திலே நல்லதும் கெட்டதும் கலந்துதானிருக்கும். நன்ருயிருப்பவர்களேத் தான் பார்த்துக் கொள்ளக் கூடாதா?'' என்று தேவானேயம்மாள் வெகு சாவதானமாக மகனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"ஏன்? என்ன சங்கதி?'' என்று கேட்ட வண்ணம் உள்ளே நுழைந்தார் தணிகைவேலனின் மாமனுர் சம்பந்த முதலியார். அவரை அடுத்து சிங்கார முதலியாரும் உள்ளே நுழைந்தார். அவர்கள் தேவானேயம்மாளின் பேச்சு முழுமையையும் கேட்டுவிட்டே உள்ளே நுழைந்தவர்களாகையால், நின்றபடியே "ஏன் அம்மா! நீங்கள் பெரியவர்கள் அதிலும் ஆயிரம் பாடு அரும்பாடு பட்டு வளர்த்தவர்கள். நீங்கள் சொல்லுவதைவிட அவர் என்ன அதிகமாய்ச் சொல்லக் கிடக்கிறது? உங்கள் வரையில் அவள் என்னதான் சொல்லுகிருள்? ஒரு வேளே மனதில் யாரையாவது நிச்சயித்துக் கொண்டு சொல்லுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டுதான் இப்படி வேதாந்தம் பேசுகிருளோ என்னமோ? அதைக் கொஞ்சம் சிவகாமியிடம் சொல்லி விசாரிக்கச் சொல்லுங்களேன். அந்தக்

காலத்திலேயே, என் மனைவி எனக்கு முறைப் பெண்ணாயிற்றே. அவளை இவனுக்கு, சிங்காரத்துக்குக் கொடுப்பதாக நிச்சயம் செய்து பரியம் கூட போட்டாயிற்று. அடுப்பங்கரையில், "அத்தானுக்குக்கொடுத்தால் கொடு. இல்லாவிட்டால் கிணற்றிலே விழுந்துவிடுவேன்" என்று எழுதி வைத்தாளாம். அவளுக்கு ஆனா ஆவன்னாதான் தெரியும். அவளே எழுதி வைத்தபொழுது, இவள் கெட்டிக்காரி மனதிலேயே வைத்துக் கொண்டு தான் வேதாந்தம் பேசுகிறாளோ என்னமோ? ரகசியமாய் விசாரித்துத் தான் பாருங்களேன்" என்றார் சம்பந்த முதலியார்.

"அதென்ன கதையோ? கேட்டால் ஏதாவது சமாதானம் சொல்லுகிறாள். அந்த சமயத்தில் அவள் சொல்லுவதைக் கேட்டால் அதுவே சரி என்று தோன்றுகிறது. எனக்கு இந்தப் பெண்ணின் கவலை தான் பெருங்கவலையாய்ப் போயிற்று. ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால் சற்று நிம்மதியாய்க் கண்ணை மூடுவேன்" என்று பெருமூச்செறிந்தாள் தேவானையம்மாள்.

"ஒரு காரியம் செய்யுங்கள். என் மகன் சுந்தரமூர்த்திக்குப் பெண் கேட்கத் தான் இன்று வந்தேனென்று சொல்லுங்கள். அதற்கு என்ன பதில் சொல்லுகிறாளென்று பார்ப்போம். நம்ம சாதியிலே தான் 'ஏழு செருப்பு தேய வேண்டும்' என்று சொல்லுவார்களே" என்றார் சிங்கார முதலியார்.

"அடே சிங்காரம்! அவள் பேசுகிற பேச்சைக் கேட்டாயானால், நீ இந்தமாதிரி யுக்தி சொல்லிக் கொடுக்க மாட்டாய். கல்யாண சங்கதி கிடக்கட்டும். நகைநட்டு, துணி, மணி, எல்லாவற்றையுமே தான் வேண்டாம் வேண்டாம் என்கிறாள். ஏது வாங்கலாமென்று கேட்டாலும் எனக்கு வேண்டாம்; சிவகாமிக்கு வேணுமானால் வாங்குங்கள் என்கிறாள். போதும் போதாததற்கு அந்த 'காந்தி' யாமே, யாரோ—அந்தக் கிழடு அதைச் சொல்லுகிறது; இதைச் சொல்லுகிறது என்று ஓயாமல் சொல்ல ஆரம்பித்து விடுகிறாள். கதர் கதர் என்று ஒரு துப்பட்டியைக் கட்டிக் கொண்டு நிற்கிறாள். பணமில்லையா? காசில்லையா? நல்லதாய் சிலுக்கும் பினுக்கும் கடைகளிலே கொட்டிக் கிடக்கிறது. அதெல்லாம் கூடாதாம். தென்னை மரத்தைக் குத்தகைக்கு (கள் குத்தகைக்கு) விடக் கூடாதாம். மாதம் நம்ம தோப்பிலிருந்து 3000 ரூ. வரவு. அது பாவமாம். அதற்கு உபமானம் பாப்பாத்தியையும் சிவக்கொழுந்தையும் உதாரணம் சொல்லுகிறாள். என்னமோ இந்தக் காலத்திலேயே எல்லாம் தான்தோன்றிகளாய் விட்டது. இதெல்லாம் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்ததனால் வந்த அனர்த்தம். இவள் தான் உலகத்தையே புரட்டி குடியையே ஒழித்துவிடப் போகிறாளாம். கூட்டங்கூடி குடிக்கக் கூடாதென்று கூவுகிற தடியன்கள் எல்லோரும், சட்டைக்காரச்சிகளோடு ஓட்டல்களில் பீப்பாய் பீப்பாயாக உருட்டுகிறான்கள். வீட்டிலேயே ரகசியமாய்க் குடிக்கிறவன்கள் மருந்து, மருந்து, என்று பீரோவிலே பூட்டிவைத்துக் கொண்டு குடிக்கிறான்கள். நம்ம தோப்பு குத்தகையை நிறுத்திவிட்டால் உடனே குடியே ஒழிந்துபோய் விடுமோ? கள்ளு சாராயக்கடைகளெல்லாம் மூடி விடுவார்களாம். எல்லாரும் வீரசைவமாய், குடிக்காமலும், கறிதின்னாமலும், தீக்ஷைபண்ணிக்கப் போகிறார்களோ? சோற்றிலே கிடக்கிற கல்லைப் பொறுக்கத் தெரியாதவர்கள் சொக்கநாதன் கோயில் மதில் கல்லைப்புரட்டி வைத்து விடுவார்கள்! எல்லாம் இந்தப் பள்ளிக்கூடத்தினால் வந்த அனர்த்தம்" என்று மிகுந்த கோபத்துடன் சொல்லி நிறுத்தினாள் தேவானையம்மாள்.

அப்படியே திகைத்துப் போய் விட்டார் சிங்கார முதலியார். என்ன பதில் சொல்லுவது என்று அவருக்கு விளங்கவில்லை. அவளுக்குப் பரிவாய், தான் பேசப்போகத் தன்னையே ஒரு உலுக்கல் உலுக்கிவிட்ட தேவானையம்மாளின் வார்த்தைகளுக்குப் பதில் பேசலாமா வேண்டாமா என்று தவிப்பதைக் கண்டு சம்பந்த முதலியார், மிகவும் தணிந்த குரலில், "அம்மா, நீங்கள் சிங்காரத்தையே புனிதம் என்று எண்ணிவிட்டீர்கள் போலிருக்கிறது. நீங்கள் தானே அவளுக்கு அருமையாய் புனிதவதியாரின் பெயரை இட்டீர்கள். பெயரளவிற்குக்

கொஞ்சம் மரியாதை வேண்டாமா? அதனால் தான் துறவிபோல்''—என்பதற்குள்

"அடே சம்பந்தம்! உனக்கு இங்கே கோமாளி வேஷம் கொடுக்கவில்லை. இந்த வேதாந்தமெல்லாம் உன்னை யார் கேட்டார்கள்? ஏதோ கொண்டு கொடுத்து 'சம்பந்தி வேட்டை' யாடினவனாயிற்றே என்று கேட்டால் கோமாளித்தனமாய் பதில் சொல்லுகிறாயா? இன்னும் சிறு குழந்தை என்றெண்ணமோ? அகம்பாவமோ? நன்றாயிருக்கிறது'' என்று சீறினாள் தேவானையம்மாள்.

இதற்குள் லம்போதர முதலியார் "அம்மா! அவர் கிடக்கட்டும். ஏதோ வேடிக்கையாய்ச் சொன்னால் நீ கோபிக்கலாமா? புனிதம் காலேஜிலிருந்து வரும் நேரமாயிற்று. வந்துவிடப் போகிறாள். பிறகு ஏதாவது வருத்தப்பட்டுக் கொள்ளும். நான் மெதுவாய் இன்று கேட்டு விடுகிறேன். சம்பந்தம்! நீயும் சிவகாமியிடம் சொல்லிவை'' என்றார்.

இதற்கிடையில் சிவகாமியின் சிறு குழந்தை பொன்னையன் சம்பந்த முதலியாரிடம் சென்று அவரைத் துவைக்கலானான். பெரியபெண் கற்பகம், 'எங்க ஆயா உனக்கில்லை' என்று ராகம் போட்டுப் பாடியவண்ணம் தேவானையம்மாளின் முதுகின்மேல் சாய்ந்துக் கழுத்திலே கைகளைக் கட்டியவண்ணம் தேவானையம்மாளை யானையாடுவதுபோல் அசைக்கத் தொடங்கினாள்.

அதுவரையில் சீறிக் கொண்டிருந்த தேவானையம்மாளின் கோபம் ஓடி ஒளித்தது. "ராஜா வாடா, என் செல்வம் வாடா'' என்று தழுதழுத்த குரலிற் கூறியவளாய் பேத்தியை இழுத்து மடியில் வைத்துக் கொண்டாள். பொக்கைவாய்ப் பற்களில் மூன்று வெளியில் தெரிந்தன.

(தொடரும்.)

---

உத்தரவாதமான
மரச்சாமான்களுக்கு
**கஸின் & கோ.**
17-18, பிராட்வே,
சென்னை.
போன்: 4221

# பெரிய குற்றங்கள்

("சிரேஷ்டன்")

## II

"ஹலோ! என்னப்பா சமாச்சாரம்? எப்ப இங்கே வந்தே. வா! வா! இப்படி" என்று என்னைக் கண்ட நண்பர் மனமுருகியவராய் உபசரித்தார். அவருடைய உற்சாகத்தில் டிராமிலேயே என்னைக் கட்டித் தழுவி விடுவார் போல் இருந்தது. நல்ல வேளையாக அப்படி ஒன்றும் செய்துவிடாதபடி டிராம் எனக்கு ஒத்தாசை செய்தது. 'டப்' என்று வண்டி நிற்கவே தழுவிக் கொள்ள வந்த நண்பர் ஒரு தடவை முன்னே பாய்ந்து பின்னே போய் விழுந்தார். நல்ல வேளையாக கண்டக்டர் அவரைத் தாங்கி "ஸார்! இதோ இந்த வாரைப் பிடித்துக் கொண்டு நில்லுங்கள்!" என்று புத்திமதி சொன்னான்.

நாங்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டோம். நண்பர் பேசிக்கொண்டே பையில் கைபோட்டார். கைபோட்டவுடன் நானும் வரப்போகும் ஆபத்தை அறிந்து, நிலைமையைச் சமாளிக்க ஆயத்தமானேன். நண்பர் எடுத்தார் ஸிகரெட் கேஸை. மறு நிமிஷம் ஊது குழலைப் பற்றவைத்து 'உஸ்'ஸென்று புகையேற்றினார். சுருள் சுருளாகவும் வட்டம் வட்டமாகவும் அவருக்குப் புகை உண்டாக்கத் தெரியும்.

நண்பருக்குப் பக்கத்தில் ஒரு வைதீகக் கிழவர் உட்கார்ந்திருந்தார். அவர் நண்பரை அடிக்கடி திரும்பிப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டார். கிழவருக்கு முகத்தில் மாறுதல் உண்டாயிற்று. முகம் சற்று மேலே போயிற்று. அதற்குப் பிறகு 'அச்! அசுச்!' என்று சப்தம் வந்தது. ஒன்று, இரண்டு, ஆறு தும்மல் போட்டார். வண்டியிலிருந்த எல்லோரும் சிரித்துவிட்டார்கள். ஆனால் சிரிப்புக் கிடையில் நண்பர் சிகரட்டைக் கீழே போட்டுவிட்டார்.


புகை பிடிப்பதால் ஹிருதயத்துக்குக் கெடுதல் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் டாக்டர்களே பிடிக்கிறார்களே என்று புகை நண்பர் சுட்டிக் காண்பிக்கிறார். வாஸ்தவம். சில டாக்டர்களுக்கு ஒவ்வொரு காரியம் செய்யும்போதும் சிகரெட் வேண்டும். உட்கார்ந்திருப்பது கூட அவர்களுக்கு ஒரு காரியமாகத்தான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் எப்போதும் சிகரெட் பிடிப்பார்களா?

மாணவர் உலகில் புகை பிடிப்பது ஒரு நாகரீகம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சிகரெட் பிடிக்கும்போது அதை எப்படிப் பிடிக்கவேண்டும், எப்படிப் புகை விடவேண்டும், என்றெல்லாம் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி சரியாகப் பிடிக்கத் தெரியாவிட்டால், சிகரெட் பிடித்தும் அசட்டுப் பட்டத்தைக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான். இப்படிப்பட்ட பிரகிருதிகளுக்குத்தான் சமீபத்தில் டாக்டர் ராஜன் சொன்னார்: "ஆண்டவன் வாழும் ஹிருதயத்தில் வீணாகப் புகையை அடைத்துக் கொள்ளாதீர்கள்."

ஹிருதயம் கடவுளின் கோவில் என்றும், அந்த இடத்தை அசுத்தம் செய்யக்கூடாதென்றும், சில மாணவர்களுக்குச் சாதாரணமாகச் சொன்னால் தெரியாது. அவர்கள் சிகரெட் பற்றவைத்துக் கொண்டபிறகு, நாம் சொன்னால்தான், அவர்கள் மூளையில் ஏறும். அப்படியிருக்கும்போது நாம் சொல்லாமலே இருந்துவிடலாமல்லவா? சிகரெட், பீடி முதலியவைகளை உபயோகிப்பதால் முதலாவதாக, கௌரவம் குறைகிறது. நாலு பெரிய (சிகரெட் பிடிக்காத) மனிதர்கள் மத்தியில் புகைபிடிப்பவன் கௌரவத்தை இழக்கிறான். இரண்டாவதாக, புகை ஹிருதயத்தைத் தாக்கிப் பலஹீனமாக்குகிறது. மூன்றாவது, சிகரெட் சாப்பிடும்போது அருகில் யாராவது இருந்தால், அவர்களுக்கு ரொம்ப இடைஞ்சல் உண்டாகிறது. நாலாவது, இந்தப் பழக்கத்தால் வீண் பணச் செலவு.

மூளையில்லாத புகை நண்பர்களுக்கு என்ன சொல்லியும் பிரயோஜனமில்லை. மூளையுள்ள நண்பர்கள் அதனால் உண்டாகும் கெடுதலைத் தாங்களே உணர்ந்து திருத்திக்கொண்டு விடுவார்கள். ஆகையால் நான் அவர்களுக்கு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

நான் சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்: "அயல்நாட்டு சிகரெட்டுகளின் பேரில் தடைவரியைப் போடுங்கள். சுதேசிக் கம்பெனிகளின் பேரில் விசேஷ வரிபோட்டுத் தொலையுங்கள்." இதனால் இந்தப் புகை வஸ்துக்கள் விலை ஏறலாம். இப்பொழுது ஏழைகளாவது இந்தப்பழக்கத்தை நிறுத்தமாட்டார்களா?




# கெட்டிக்கார ராஜா

(ஸ்ரீமதி ஜானகி அம்மாள்)

ஒரு ஊரில் ஒரு அரசனிருந்தான். அவன் தர்ம நீதியாய் அரசு புரிந்து வந்தான். அவனுடைய மந்திரியும் அரசனைக் காட்டிலும் பதின் மடங்கு அதிகமாய் தர்மமே உருவெடுத்து வந்தாற்போல் ராஜ்ய காரியங்களை நடத்தி வந்தான். எப்பொழுது மனிதனாகப் பிறந்தோமோ, அப்பொழுது இறப்பது நிச்சயமல்லவா? ஆகையால் மந்திரியும் இந்த லோகத்தில் தர்மம் செய்வதை விட்டுப் பரலோகத்திலும் தன் தர்மக் கொடியை நாட்டுவதற்காக மண்ணுலகை நீத்தான்.

மந்திரியின் மரணத்தினால் அரசன் மிகவும் துக்கமடைந்தான். இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்தான். அரசனால் அரசாங்கம் நிலைப்பதில்லை. அரசுக்கு அஸ்திவாரம் அமைச்சனேயாகும். 'கரணேஷு மந்திரி:' என்கிறபடி, முன் வருபவைகளை ஆய்ந்தோய்ந்து பார்த்து காரியா காரியங்களைச் சரிவரச் செய்வதில் நிபுணனாயிருக்க வேண்டும். பொறுமையுள்ளவனாகவும், தயையுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் குடிகள் மனம் அவனுடைய காரியங்களினால் சந்தோஷம் அடையும். அந்த சந்தோஷத்தின் பயனாக அரசு தழைத்தோங்கும். தர்மமும் குணமும் பொருந்தியவனாய் ஓர் மந்திரி அகப்பட வேண்டுமேயென்று அரசனுக்குக் கவலையதிகரித்தது.

ஒரு நல்ல மந்திரியை அடைவதற்காக அரசன் யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தான். பிறகு மந்திரியின் இடம் காலியாயிருப்பதாயும் அதற்குத் தகுதியுள்ளவர்கள் அரண்மனையிலேயே வந்து சில காலம் தங்கியிருக்க வேண்டுமென்றும் பறை யறைவித்தான். நூறு பேர்கள் வந்து கூடினார்கள். அவரவர்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கப்பட்டது.

* * *

ஒவ்வொரு அபேக்ஷகர் வீட்டு வாயிலிலும் சேவகன் நின்று கொண்டிருந்தான். அவன் உள்ளே செல்ல எவரையும் அனுமதிக்க மாட்டான். ஒரு நாள் காலை ஒரு ஏழை ரோட்டிலேயே நின்று காத்திருந்து வீட்டு எஜமான் வெளியில் வரும்பொழுது நமஸ்காரம் செய்து "ஐயா! நான் ரொம்ப ஏழை. மூன்று நாட்களாக வயிற்றிற்கில்லை. பட்டினியாய்க் கிடக்கிறேன். கொஞ்சம் அன்னம் அளியுங்கள் அல்லது காசு கொடுத்தால் ஏதாயினும் வாங்கிச் சாப்பிட்டுப் பசியை ஆற்றிக் கொள்கிறேன்" என்று கெஞ்சினான். அதைச் சிலர் கவனிக்காமல் விசையாய்ச் சென்றார்கள். அவனும் பிச்சைக்காரன்போல் அவர்கள் கூடவே சென்றான். எஜமானன் "சட், இதென்ன அவஸ்தை? சோம்பேறிப் பயல்கள்! போய் கூலிவேலைசெய்" என்பதைச் சொல்வானே யொழிய ஒரு காசு கையிலிருந்து வராது. இப்படியாக தொண்ணூத்தொன்பது பேர்களைக் கேட்டாய் விட்டது. நூறாவது வீட்டை அடைந்தான்.

ஏழையைக் கண்டதும் அங்கிருந்த சேவகன் "ஸ்வாமி வரவேணும்" என்று பணிந்து அழைத்தான். வந்த ஏழை "அப்பா, நீ ரொம்ப நல்லவனாயிருக்கிறாய். உன் எஜமானனும் உன்னைப் போலத் தானிருப்பார் என்று நம்புகிறேன். சிலர் வீடுகளில் இருக்கும் சேவகர்கள் வேட்டை நாய்போல் சீறி விழுகிறார்கள். உன் குணத்தைப் பார்த்து மிகவும் ஸந்தோஷமடைகிறேன். உனக்கு நான் என்ன

கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்றுன்.

சேவகன் கீழ்ப்படிதலுடன் "ஐயா நான் தங்களுக்கு என்ன உபகாரம் செய்து விட்டேன் எனக்குக் கைமாறு செய்ய? என் எஜமானரின் உத்தரவுப் பிரகாரம் தான் நடந்தேன். ஏழைகள் யார் வந்தாலும் தடையின்றி வழி விடும்படி எங்கள் எஜமானரின் உத்திரவு. நீங்கள் கொஞ்சம் நேரம் இந்த ஆசனத்தில் உட்காருங்கள். எஜமான் இப்பொழுது பூஜை செய்து கொண்டிருக்கிறுர். பூஜை முடிந்ததும் அதிதிகள் யாராயினும் வந்திருக்கிறுர்களா வென்று பார்த்துவிட்டுத் தான் போஜனம் செய்வார். அவர் வெளியில் வந்ததும் உங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளலாம்" என்றுன். ஏழை சேவகனுடைய சொல்லுக்கிணங்கி ஒரு பக்கமாய் உட்கார்ந்திருந்தான்.

வீட்டு எஜமானன் வழக்கம் போலப் பூஜையை முடித்துக்கொண்டு வெளியில் வந்து பார்த்தான். ஏழை அவனைப் பார்த்து மிகவும் பணிவாகக் கும்பிட்டான். எஜமான் வந்தவனுக்குக் கால் அலம்பிக் கொள்ள ஜலம் கொடுத்துச் சாப்பிட வரும்படி அழைத்தான். சாப்பாடு முடிந்த பிறகு எஜமானன் அதிதியை "என்னிடம் வந்த காரிய மென்ன?" வென்று விசாரித்தான். ஏழை "மூன்று நாளாய் எனக்குப் பசி. இவ்வூரில் ஒருவரும் அன்னமிட மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இன்றையதினம் தான் உங்களுடைய வீட்டில் மனதிற்கினிய சாப்பாடு கிடைத்தது. நாளையதினம் என் தகப்பனுருக்குத் திதி. அதை நடத்துவதற்காகத் தாங்கள ஏதாயினும் உபகாரம் செய்ய வேண்டும்" என்றுன். ஏழை கட்டியிருந்த வேஷ்டி கந்தலைப் பார்த்துச் சகிக்காமல் ஒரு ஜதை வேஷ்டியும் கொடுத்துச் சில வெள்ளிக் காசும் கொடுத்து முகமலர்ச்சியுடன் அனுப்பிவைத்தான் எஜமானன். ஏழை அவைகளைப் பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

* * *

குறிப்பிட்ட தினம் வந்தது. ராஜ சபை கூடியிருந்தது. ஊரிலுள்ள பெரிய மனிதர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நிரம்பியிருந்தார்கள். மந்திரி பதவிக்கு அபேக்ஷித்து வந்தவர்கள் எல்லாரும் நன்ருய் உயர்ந்த உடைகளால் அலங்கரித்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். ஒருவர் மாத்திரம் சாதாரண உடையணிந்து வந்திருந்தார். அரசன் எழுந்து, "பிரஜைகளே! உலக முழுவதும் பணத்தில் ஆசைகொண்டு தானதர்மத்தை அடியுடன் மறந்து விட்டார்கள். தர்மம் நிலைக்காவிடில் உலகம் நிலைக்காது. தர்மம் தான் சகலமும் அளிக்கும் கடவுள். மந்திரி பதவிக்கு அபேக்ஷையுடன் வந்திருப்பவர்களில் எல்லோரையும் பரீக்ஷை செய்து பார்த்தேன். இவர்களில் 99 பேர்களிடத்திலும் தர்மம் தலைகாட்டவில்லை. நூருவது மனிதரிடம் குடிகொண்டிருக்கிறது" என்று கூறித் தான் செய்த தந்திரத்தை யெல்லாம் சபையோருக்குச் சொல்லி அவரால் கொடுக்கப்பட்ட வேஷ்டியையும் 5 ரூபாயையும் சபையில் வைத்தான். மற்றும் அவரைத் தன்னுடைய மந்திரியாக எடுத்துக் கொண்டிருப்பதாயும் அவரை மந்திரியாக அடைந்ததினுல் தான் சந்தோஷ மடைந்திருப்பதாயும் கூறினுன். ஜனங்களும் தங்களுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தி அரசனுடைய அறிவை உணர்ந்து ஆச்சரிய மடைந்தார்கள்.

# புத்தக விமர்சனம்

மாயாவினோதினி: (ஸ்ரீ ரவீந்திரநாத டாகுர்) ஸ்ரீமதி தஞ்சம் மொழி பெயர்த்தது. கலைமகள் காரியாலயம், மைலாப்பூர். விலை ரூ. 1-8-0.

விஷயம் தெரிந்த சில வங்காளி விமர்சகர்கள் ஸ்ரீ ரவீந்தரநாத டாகுரின் நாவல்கள்தான் வங்காளி பாஷையிலேயே மிகச் சிறந்தவை என்று கூறுகிறார்கள். கோரா என்றும் நவீனத்தை மிகவும் உயர்வாகக் கூறுகிறார்கள்.

ஸ்ரீ ரவீந்திரருடைய நவீனங்களே ஒரு தனிரகம். அவற்றில் கதை அம்சம் அதிகம் இருக்காது. திடுக்கிடும் சம்பவங்களும் இருக்காது. அவருடைய நாவல்கள் பூராவும் மனோ தத்துவ ஆராய்ச்சிதான். 'குமுதினி' என்ற நவீனம் தமிழர்களுக்கு ஏற்கனவே தெரியும்; இப்பொழுது 'மாயாவினோதினி' (வங்காளியில் சோகேர் பாலி என்று பெயர்) ஸ்ரீமதி தஞ்சம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மொழி பெயர்ப்பு எளிய நடையில் மூலத்தின் உணர்ச்சி குன்றாமல் அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது.

கதையின் பாத்திரங்கள் எல்லோரும் உயிர் நிறைந்த உருவங்களாக நம் மனதைக் கவருகிறார்கள். ஆசாலதாவின் குணத்தை யாரால் பாராட்டாமல் இருக்க முடியும்? வினோதினி ஏக்கம் உருவெடுத்துவந்த எழிற் பிறவி. அவளுடைய உணர்ச்சிப் ஒரு பெருக்கின் விளைவுதானே இக்கதையே! மஹேனும் விஹாரியும் கோராவிலிருக்கும் கௌர்மோகனையும் வினயனையும் நினைப்பூட்டுகிறார்கள்; அன்னபூர்ணி ஆனந்தமலையைப்போல இருக்கிறாள். ராஜலக்ஷ்மி ஒரு தாய்!

ஸ்ரீ ரவீந்திர நாதரின் மற்ற நவீனங்களும் கூடிய சீக்கிரம் தமிழில் வருமென்று நம்புகிறோம்.

பொம்மையா, மனைவியா? (ஹென்ரிக் இப்ஸன்) ஸ்ரீ க. நா. சுப்ரமணியம் மொழிபெயர்த்தது. மணிக்கொடிப் பிரசுரம். நவயுக பிரசுராலயம் லிமிடெட், அரண்மனைக்காரத் தெரு, சென்னை. விலை அணா 8.

ஹென்ரிக் இப்ஸன் நாடக உருவையும் சம்பிரதாயத்தையுமே புரட்சிகரமாக மாற்றினவர் என்று மேனாட்டு இலக்கிய சரித்திரத்தில் புகழ்பெற்றவர். நாடகக் கலையே அவர் கையில் ஒரு புது வலுவையும் ஆழ்ந்த அர்த்தத்தையும் பெற்றது. பெர்னார்ட்ஷா முதலியவர்கள் நாடகம் எழுதுவதில் அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவருடைய 'டால்ஸ் ஹவுஸ்' என்ற நாடகம் 'பொம்மையா? மனைவியா?' என்று தமிழில் பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இப்ஸனுடைய மூலத்தின் வேகத்தைப் பூராவும் தமிழில் கொண்டு வருவது எளிதல்ல. ஸ்ரீ சுப்ரமணியம் தான் எடுத்துக் கொண்ட சிரமான காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். நோரா நம்மிடையேகூட இருக்கக்கூடிய ஒரு 'மனைவி'தான். கதையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பளிச்பளிச்சென்று உதிக்கும் 'நாடக உணர்வு' பிரமிப்பை அளிக்கக்கூடியது. இந்த மொழிபெயர்ப்பு தமிழ் எழுத்தாளர்கள் நாடகக் கலையை புதிய முறையில் கையாள ஓரளவு ஒத்தாசை செய்யுமென்று நம்புகிறோம்.

இப்படிப் பட்ட இலக்கிய சூரர்களின் கிரந்தங்கள் தமிழில் வெளிவரவேண்டியது மிகவும் அவசியம். இவ்வேலையில் ஈடுபட்டதற்காக நாம் பிரசுராலயத்தாரையும் போற்றுகிறோம்.

நவமணி மாலை: [ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி (மிஸஸ் கே. ஸ்ரீனிவாசன்) லோத்ரா பிரஸ், ராயப்பேட்டை, மதராஸ், விலை அணா 12]

"நம் தேசத்தில் அனுஷ்டானத்திலிருந்து வரும் பழக்க வழக்கங்கள், ஆசார அனுபவ விதிகள், நடை நொடி பாவனைகள், வாழ்க்கை முறைகள் இவற்றை ஒட்டிய என் சிற்றறிவுக்குத் தோன்றிய அபிப்பிராயங்களை வெளியிடும் நோக்கத்துடன் என் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் 'நவமணி மாலை'யில் கோர்க்கப்பட்டிருக்கும் மணிகளை (சிறுகதைகளை)

சித்தரித்து எழுதலானேன்'' என்று ஆசிரியர் முகவுரையில் எழுதுகிறார்.

கதைகளில் மேற்சொன்ன ஊக்கத்தின் சின்னங்கள் இருக்கின்றன. நடையும் தெளிவாகவே இருக்கிறது. ஆனால் சம்பவங்களும் உணர்ச்சி விஸ்தாரங்களும் ஆங்கிலத்தில் 'சென்டிமென்டல்' என்று சொல்லும் முறையில் இருக்கின்றன. ஒரு பாவத்தைக் கொஞ்சம் அதிகமாகச் சித்தரிப்பதால் ஏற்படும் குறை இது. ஆனால் ஆசிரியர் எழுதிக்கொண்டு போகும் முறையில் அது கூடிய சீக்கிரம் நீங்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. சில இடங்களில் வர்ணனைகள் அழகாக இருக்கின்றன.

மேன் மேலும் கதைகள் எழுதித் தேர்ச்சிபெற ஆசிரியருக்குச் சிறந்த பயிற்சி இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. நவமணி மாலை அதற்கு ஒரு அடையாளம்.

பாலஸ்தீனம்: (ஸ்ரீ வெங்களத்தூர் சாமிநாத சர்மா, பிரபஞ்சஜோதிப் பிரசுராலயம். பாரத்பந்தர், 47-31 தெரு, ரங்கூன்)

பிரபஞ்ச ஜோதிப் பிரசுரங்கள் அரசியல் அறிவிற்கு இன்றியமையாத சாதகங்களாக ஆகிவிட்டன. ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா உலகத்து அரசியல் விஷயங்களைத் தமிழில் தெளிவாகச் சொல்லும் திறமையைப் பெற்றிருக்கிறார்; அதற்குத் துணையான பெரும் ஊக்கமும் இருக்கிறது. ஆகையால் அரசியல் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு நெருக்கடிகள் சமயத்தில் அவர் புத்தகங்கள் எழுதி வெளியிடுகிறார்.


பாலஸ்தீனத்தைப் பற்றிய புத்தகம் இந்த சமயத்தில் மிகவும் உபயோகமாக இருக்கும். லண்டனில் மகாநாடு நடக்கிறது. விஷயம் என்னவென்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குத் தகுந்தவாறு இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. மத்தியதரைக் கடலின் முக்கியத்துவத்தை விளக்கும் ஒரு தெளிவான படமும் இருக்கிறது.

ஸ்ரீ சர்மாவின் திறமையையும் ஊக்கத்தையும் அறிவையும் நாம் மனமாறப் போற்றுகிறோம்.

கர்னாடக சங்கீத வித்வான்கள்: ஆப்டோன் ஆல்பம் (பிரசுரகர்த்தர்கள்: The Directories and Souvenirs Publishing Co. of India, Mylapore, Madras)

இது மிகவும் உபயோகமான ஒரு பிரசுரம். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீக்ஷிதர் இவர்களுடைய ஜீவிய சரித்திரங்களுடன் பல ஆப்டோன் படங்கள் இருக்கின்றன. மேற்சொன்ன மூவர்கள் படங்களைத் தவிர, கிருஷ்ண பாகவதர், நேமம் சுப்ரமணிய அய்யர், பொன்னையா பிள்ளை, அம்பி தீக்ஷிதர், மகா வைத்தியனாதய்யர், பட்டினம் சுப்ரமணிய அய்யர், கோயம்புத்தூர் ராகவய்யர், முதலிய பழைய காலத்து வித்வான்கள் படங்களும், தற்காலத்து வித்வான்கள் எல்லோருடைய படங்களும் இருக்கின்றன. சில அபூர்வமான பழைய படங்கள் இதில் இருப்பது குறிப்பிடத் தக்கது. வீணை தனம்மாள் யௌவனமாக இருக்கும் படம், திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர் படம், புஷ்பவனம் படம் இவையும் குறிப்பிடத் தக்கவை.

இது சங்கீத அபிமானிகளுக்கு ஒரு சிறந்த கைப்புத்தகம் என்பதில் சந்தேகமில்லை.




## நெருக்கடி

தேர்தல் சமயத்தில், காரியக்கமிட்டி அங்கத்தினர்களைப்பற்றி, சுபாஷ்பாபு சில அறிக்கைகளை விடுத்தார். அவை எனக்கு ஆச்சரியத்தையும், வருத்தத்தையும் தந்தன. எனக்குத் தெரிந்தவரையில், அவைகளுக்கு ஹேதுவே இல்லை. உண்மை இருக்கும் பக்ஷத்தில், அவைகளில் கண்ட குற்றம் செய்தவர்களோ, அல்லது அவைகளை ஆதரித்தவர்களோ, காங்கிரசின் காரியத்தைக் கவனிக்க லாயக்கில்லாதவர்கள். அந்த அறிக்கைகளில் உண்மையில்லாவிடில் உடனே அவைகளை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். வேறு வழியில்லை. காங்கிரசின் உன்னத ஸ்தானத்தில் இருந்துகொண்டு அவநம்பிக்கையுடனும் ஒருவருக்கொருவர் சந்தேகத்துடனும் வேலைசெய்வது நன்றாக இல்லை. இது தான் கவனிக்கத்தகுந்த விஷயம் என்று காங்கிரஸ் தலைவருக்கு எடுத்துக் கூறினேன். ஆனால் அதைப்பற்றி இதுவரையில் அவர் கவனிக்கவில்லை.

* * *

"இடது" "வலது" என்னும் பதங்கள் அனர்த்தத்தை உண்டுபண்ணுகின்றன. இதனால் சுபாஷ்பாபுவை தேசிய சர்வ தேசிய விஷயத்தில் அவர் சிபார்சு செய்யும்கொள்கைகளைச் சீர்தூக்கிப்பார்க்க, ஏற்பாடுகள் செய்யச் சொன்னேன். சில விஷயங்களில் நானும் அவரும் ஒத்துப்போகவில்லை. அதனால்தான் ஒரு தெளிவுவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் தெளிவுக்கு வரமுடியவில்லை என்பது வருந்தத்தக்கது இப்படிச் சந்தேகம் தீராததற்குக்காரணம் அவருடைய சொற்பொழிவும், உடம்பு அசௌகர்யமும்தான். இதனால்தான் அவருடன் நேரில் தர்க்கம் செய்ய முடியவில்லை.

* * *

நம்முடைய இயக்கத்தின் முக்கியஸ்தானத்தில் புதிய வழிகள் பின்பற்றப்படுகின்றன. இதனால் அபிப்பிராய பேதமும் சச்சரவும் தான் உண்டாகும். இது எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது.

* * *

நான் ஓர் ஆழ்ந்த அபேதவாதியாயும் ஜனநாயகத்தில் நம்பிக்கை யுள்ளவனாகவும் இருந்தேன்; இருக்கிறேன். அதோடுகூட, சென்ற 20 வருஷங்களாக வெற்றியுடன் அனுசரித்து வந்த காந்திஜியின் அஹிம்ஸா தர்மத்தையும் ஒப்புக் கொள்கிறேன். ஜனங்களிடத்திலிருந்துதான் நமக்குப் பலம் வர வேண்டும். புது உலகத்தை உற்பத்திசெய்வதற்கு வேண்டிய அந்தப்பலம் ஓர் கட்டுப்பாடான பலமாகத்தான் இருக்கவேண்டும்.

குழப்பதினாலோ அல்லது குழப்பத்தை உண்டாக்குவதனாலோ நம் உயர் இந்தியாவைப்பற்றிய கனவை உண்மையில் காண முடியாது. சில சமயங்களில் இந்தக் குழப்பம் சிறந்தவேலையையும் செய்கிறது, என்பது வாஸ்தவமே. ஆனால் சாதாரணமாக அதனால் கஷ்டமும், பிற்போக்கும் கலவரமும்தான் உண்டாகின்றன. நமக்குச் சரியாக உபயோகப்படுத்தத் தெரிந்தால், இப்போது நம்முடைய பலம், நம் சுதந்திரப் போருக்குப் போதுமானது. நாம் பலவீனமான ஜந்துக்களல்ல. தலை விதியை நொந்துக் கொள்ளும் தைரியமற்றவர்களல்ல. அப்படியிருக்க, நாம் ஏன் தைர்யமற்று இருக்கவேண்டும்?

* * *

இந்த அந்தரங்க நெருக்கடியில் நாம் ஒருவர் மனதை ஒருவர் அறிந்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். இதனால் நாம் லாபமடைய வேண்டும்.

ஏதேஷ்டமான அனர்த்த வார்த்தைகளை, நாம் இதுவரையில் உபயோகித்துக் கொண்டிருந்தோம். இபபொழுது நடக்கும் சம்பவங்களிலிருந்து வரப்போகும் சங்கதிகளை அறிய சக்தி நமக்கு இருந்தால் எதிர்காலத்தைப் பற்றி இப்போது நாம் கவலைப்பட வேண்டாமென்று எண்ணுகிறேன். பல தடவைகள் நாம் செய்ததுபோல், ஒரு நெருக்கடி வந்தால் நாம் ஒன்றாக அதை எதிர்க்கத் தயாராயிருக்கவேண்டும்.

—ஜவஹர்லால் நேரு.

## இந்தியன் லைப் இன்ஷ்யூரன்ஸ்

1929-ம் வருஷத்திலிருந்து 1936 வரை இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் செல்வ நிலையைப்பற்றிச் சர்க்கார் ஓர் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலிருந்து நாம் சில முக்கியமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறோம்.

1. இந்தியாவில் நடந்த மொத்த வியாபாரம் இரண்டு பங்கு அதிகமாகியிருக்கிறது.

2. புது 'பிஸினெஸ்' தொகையில் இந்தியக் கம்பெனிகளின் பங்குகள் 51%லிருந்து 78% ஆக உயர்ந்திருக்கின்றன.

3. அயல்நாட்டுக் கம்பெனிகளின் பங்குகள் 43% லிருந்து 22% ஆகக் குறைந்திருக்கின்றன.

4. 1926-ம் வருஷத்திலிருந்து 1936-ம் வருஷம் வரை அயல்நாட்டுக் கம்பெனிகள் இந்தியாவில் செய்திருக்கும் 'பிஸினெஸ்'ஸின் தொகையில் பிரமாதமான குறைவு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. அதாவது, இந்தியக் கமபெனிகள் ஜமாய்த்துக் கொண்டிருக்கும் போது, அயல்நாட்டுக் கம்பெனிகள் தங்கள் பங்கை அதிகரித்துக்கொள்ள முடியாவிட்டாலும் பிஸினெஸ் தொகையை முன் போலவே காட்டி வருகின்றன.

மற்றொரு முக்கியமான புள்ளி விபரத்தைப் பார்க்கப்போனால் பின்வரும் அம்சங்கள் வெளியாகிறது.

1. 1929-ம் வருஷத்தில் இந்தியக் கம்பெனிகள் நடைமுதல் 'பிஸினெஸ்'ஸில் 100-க்கு 55 விகிதம் பங்குகள் பெற்றிருந்தன. 1936-ம் வருஷத்தில் பங்குகள் 64 சத விகிதமாக உயர்ந்திருக்கின்றன.

2. 1929-ம் வருஷத்தில் அயல்நாட்டுக் கம்பெனிகளின் பங்கு 45 சதவிகிதமாக இருந்தது. 1936-ம் வருஷத்தில் 36 சத விகிதமாக ஆகிவிட்டது.

1929-ம் வருஷத்திலும் 1936-ம் வருஷத்திலும் இந்தியக் கம்பெனிகளுக்கும் அயல் நாட்டுக் கம்பெனிகளுக்கும் உள்ள சராசரி பாலிஸி வித்தியாசத்தை எடுத்துக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1929 | இந்தியக் கம்பெனிகள் | 1628 |
| | அயல்நாட்டுக் கம்பெனிகள் | 3086 |
| 1936 | இந்தியக் கம்பெனிகள் | 1508 |
| | அயல்நாட்டுக் கம்பெனிகள் | 3148 |

மேற்கண்ட புள்ளி விபரங்களி லிருந்து ஒரு அவசரமான முடிவுக்கு நாம் வரக்கூடாது. அயல்நாட்டுக் கம்பெனிகளது பாலிஸிகளின் சராசரி கூடத்தான் இருக்கும். ஏனென்றால் ரூ. 1500க்குக் குறைந்து அவர்கள் இன்ஷ்யூர் செய்வது கிடையாது. மேலும், நடுத்தர, பணக்கார வகுப்பைச் சேர்ந்த இந்தியர்கள் பலர் அக்கம்பெனிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள்.

இந்தியக் கம்பெனிகளின் பாலிஸி சராசரி குறைவாகத்தான் இருக்கும். ஏனெனில் இந்தியக் கம்பெனிகள் இன்ஷ்யூரன்ஸின் தத்துவத்தை கிராமங்களுக்குக்கூடக் கொண்டு செல்லுகின்றன. ரூ. 500-லிருந்து பாலிஸிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சில கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் ரூ. 250க்குக்கூட பாலிஸி சேர்த்துக் கொள்ளுகின்றன. ஆனால் ஒரே ஒரு சந்தோஷம். இந்தியக் கம்பெனிகள் வருஷாவருஷம் செய்யும் புது 'பிஸினெஸ்' தொகை இரட்டிப்பான போதிலும், பாலிஸிகளின் சராசரி மட்டும் குறைந்துவிடவில்லை. அதாவது, பணக்காரர்கள்கூட இந்தியக் கம்பெனிகளை ஆதரிக்கிறார்களென்று தெரிகிறது.

புது சட்டம் 500 ரூபாய்க்குக் குறைந்து பாலிஸிகளை அனுமதிப்பதைத் தடுக்கிறது. இப்படிச் செய்ததால் பாலிஸிகளின் சராசரியை உயர்த்த முடியாமல் போகிறது. ஏனென்றால் அவை ரூ. 750-க்கு பாலிஸி சேர்க்க ஆரம்பித்துவிட்டன. இதனால் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்பட வழியில்லாமல் இருக்கிறது. —**ஸ்ரீ கே. என். சமர்த் எம், காம்.**

## மைசூரின் அபிவிருத்தி

மைசூரில் பன்னிரண்டு வைத்திய ஸ்தாபனங்கள் உள்ளன. ஐந்து கட்டப்பட்டு வருகின்றன. ஆஸ்பத்திரிகளுக்காகத் தனிப்பட்டவர்கள் $2\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்கள். ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்கள் ஒவ்வொரு பஞ்சாயத்துக் கிராமங்களுக்கும் சென்று வைத்தியம் பார்க்கிறார்கள். இதனால் கிராமத்தாருக்கு வீட்டு வாசலில் வைத்திய வசதி கிடைத்திருக்கிறது. சென்ற வருஷம் மைசூர் வைத்திய இலாகாவில் இவை தான் முக்கிய அம்சங்கள். வைத்தியவசதிக்காக சர்க்கார் $18\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் செலவு செய்திருக்கிறது. வைத்தியர் கருவிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட பணத்தில் சுமார் லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் பங்களூர் இன்டஸ்ட்ரியல் லபாரடரியில் வாங்கப்பட்டன.

* * *

மைசூர் காடுகள் 36,95,97-சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ளவை. 3898 டன்கள் மூங்கில்களை காட்டிலாகா மைசூர் காகித மில்லுக்குக் கொடுக்கிறார்கள். 8,25,207 கியூபிக் அடிகள் மரங்கள் காட்டிலிருந்து டிபோக்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன. 2253

டன்கள் சந்தனக்கட்டை தயாராகிறது. காட்டிலாகாவின் மொத்த வருமானம் 28 லக்ஷம். செலவு 14 லக்ஷம்.

## காந்தீயம்

நாஸிஸமும் —பாஸிஸமும்கூட—வியாதி பிடித்ததும் பகுத்தறிவில்லாததுமான பலாத்காரத்தைக் கையாளும் ஓர் தேசீயம். அது சமாதானமாக இல்லாமல், பலாத்காரத்தினுலேயே, மற்ற தேசங்களின் அரசியல், பொருளாதாரம் முதலிய அம்சங்களில் குதிரை ஏறும் தன்மை கொண்டது. மற்ற தேசத்தைக் கொள்ளையடிப்பது, அவர்களுடைய கலே, வாழ்க்கை முதலியவைகளால் தான் முன்னுக்கு வருவது, தங்களுடைய ராஜ்யத்தைப் பலப்படுத்த, பெருக்க, சைன்யங்களை அதிகப்படுத்துவது-இவைகள்தான் இந்த நாளைய ஜெர்மனி, இத்தாலி தேசங்களின் பாஸிஸத்தின் கொள்கைகள். ஆனுல் காந்தீயம், சத்யத்தினுல் ஒரு பெரிய தேசத்தின் விமோசனத்தையும், ஆத்ம சிந்தனையையும் உண்டுபண்ணுகிறது. பாஸிஸம் கையாளும், பலாத்காரத்தையும், அஹிம்ஸையையும், நிராகரிக்கிறது காந்தீயம். அரசியலிலும், பொருளாதாரத்திலும், சுகாதாரத்திலும், ஒரு தேசம் இழந்ததும் சரித்திரத்தினுல் அதற்குச் சொந்தமானதும், தன் சுய விருத்திக்கு அவச்யமானதுமான, உரிமைகளைத் திரும்பி வாங்க ஏற்பட்டிருக்கும் ஓர் இயக்கம்தான் காந்தீயின் தேசீயம். இந்த உரிமைகளைக் கேட்பது உசிதமல்லவென்றும் இது தக்க சமயமல்லவென்றும் கூறலாம். ஆனுல் புத்தியுள்ள எந்த அரசியல் வாதியும் மேற்கண்ட இரண்டு முறைகளையும் அவைகளின் கொள்கைகளையும் ஒற்றிட்டுப்பார்த்து, அவைகள் இரண்டுக்கும் ஒற்றுமை இருக்கிறது என்று சொல்லமாட்டார்கள்.

—இண்டியன் அபேர்ஸ்.

## இந்தியர்களால் அமைக்கப்பட்ட ஒரு சட்டசபை

சமஸ்தான ஜனங்களின் சுதந்திரமே பெரியது. ஆயினும் அது மிகப்பெரிய இந்தியாவின் சுதந்திரத்தின் ஒரு பாகம்தான். இந்த மிகப் பெரிய சுதந்திரத்தை அடையும்வரையில், சமஸ்தானங்களின் சுதந்திரப் போர் நமக்கு சிரமத்தைக் கொடுக்கும். சமஷ்டி நம் பேரில் போடப்பட்டால்,நாம் அத்துடன் சண்டை செய்ய வேண்டும். அதைத் தள்ளவேண்டும். எங்கெங்கு சமஸ்தான ஜனங்களுக்கு விரோதமாக பிரிட்டிஷ்அதிகாரம்தலையிடுகிறதோ அங்கங்கு அதை நாம் எதிர்க்கவேண்டும். ஒரு கடைசி முடிவுக்குவர காலம் வந்திருக்கிறது. விடுதலையடைய, இந்தியாவுக்குச் சட்டங்களை தயார் செய்யவும், இந்தியர்களால் அமைக்கப்பட்ட ஒரு சட்டசபை அவசியம் சமஸ்தானஜனங்களின் மகாநாடு மிகவும் அரிய பெரிய வேலைகளைச் செய்துவருகிறது. ஆனுல் அது செய்ய வேண்டிய வேலையில், இது ஒரு சிறிய பாகம்தான். அது தன் பல வேலைகளைச் செய்ய தன்னைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். சமஸ்தானங்களைப்பற்றி எந்த பிரச்னையையும் அது எடுத்துக்கொள்ளக் கூடியதாக ஆக வேண்டும். போராட்டத்தில் ஈடுபடும் நம் சகோதரர்களுக்கு மிகுந்த உதவியளிக்கவேண்டும். சமஸதானங்களில் 'ப்ராஜாமண்டல்' களும் ஜனங்களின் கூட்டமும், சேர்க்க உதவிபுரிய வேண்டும். ஜாதிப்பிரிவு என்பதில்லாமல் அது ஜாக்ரதையாகக் பார்த்துக்கொள்ளவேண்டும். எல்லாவற்றைக்காட்டிலும் முக்கியமான 'அஹிம்ஸை'யை நம்பிக்கையுடன் தான் கையாளுவதோடு நின்றுவிடாமல், 'அஹிம்ஸை' தான் நம்போராட்டத்தின் அஸ்திவாரம், என்பதை மற்றவர்களும் மறக்காமலிருக்கச் செய்ய வேண்டும்.

—ஜவஹர்லால் நேரு.

## ரஷ்யாவில் மனித உரிமை

புதிய ஸோவியத் சட்டத்தின் கீழ் மனிதனுக்கு பின் வரும் உரிமைகள் கிடைத்திருக்கின்றன.

ரஷ்யாவின் ஒவ்வொரு பிரஜைக்கும் வேலைசெய்யவும், உத்தரவாதமான வேலை செய்யவும், செய்த வேலையின் அளவுக்கும் தன்மைக்கும் தகுந்தாற்போல சம்பளம் பெறவும் உரிமை உண்டு. மற்ற உரிமைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது இந்த உரிமைதான்.

1931-ம் வருஷத்திலிருந்தே ரஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துபோய் விட்டது. 1928-ம் வருஷத்தில் தேசத்தில் ஒருகோடி தொழிலாளர்கள் இருந்தார்கள். 1935-ம்வருஷத்தில் 2½கோடிக்கு மேல் இருக்கிருர்கள். தொழில் அபிவிருத்தி அடைகிற வரையில்தான் வேலைகொடுக்க முடியும், அதற்குப் பிறகு வேலை அகப்படாது என்று சிலர் நினைக்கிருர்கள். ஆனுல் தேசீயத் திட்டம் உள்ள, சர்க்கார் வசமான, தொழில்களில் அதிகமான உற்பத்தி ஏற்பட்டால் தொழிலாளியின் வேலை செய்யும் நேரம் குறைவாகுமென்றும், அதை கலே, விக்ஞான முன்னேற்றத்தில் செலவிடலாமென்றும் சோவியத் தொழிலாளிகள் அறிந்திருக்கிருர்கள். ஏனென்ருல் நடுவில் குறுக்கிட தனிப்பட்ட முதலாளிகள் இல்லை. இதுதான் சட்ட பூர்வமான வேலை செய்யும் உரிமையின் பொருளாதார உத்திரவாதம்.

இரண்டாவதாக, சோவியத் தொழிலாளிக்கு விடுமுறை உரிமை உண்டு. சோவியத்

சட்டத்தின் 119-ம் பிரிவு கூறுகிறது: "பெரும்பாலான தொழிலாளிகளின் வேலை செய்யும் நேரத்தை நாளுக்கு ஏழுமணி நேரமாகக் குறைத்திருப்பதாலும், தொழிலாளருக்கு சம்பளத்தோடு வருஷாந்திர விடுமுறை ஏற்படுத்தியிருப்பதாலும், தங்கும் விடுதிகளும், கிளப்புகளும், வீடுகளும் அமைத்திருப்பதாலும்; ஓய்வு எடுத்துக்கொள்ளும் உரிமை பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது."

ஓய்வு என்பது வெட்டியாய் உட்கார்ந்திருப்பது என்பதல்ல. ஓய்வுக்காகவும் விளையாட்டுகளுக்காகவும் வகுப்புக்களும், கிளப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்காக அரசாங்கமும் டிரேட் யூனியன்களும் பணம் செலவழிக்கிருர்கள். இவைகளை யெல்லாம் மேற்பார்க்க அதிகாரிகளும் இருக்கிருர்கள்.

மூன்ருவதாக, 120-ம் விதியின்படி "தள்ளாத வயதிலும் அசௌகர்யத்தின் போதும், வேலைசெய்யும் சக்தியை இழந்தபோதும் பண உதவிபெறும் உரிமை" கிடைத்திருக்கிறது. முதலாளி தேசங்களில் இது அசாத்தியமாகத் தோன்றலாம். ஆனல் ஸோஷலிஸத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜையும் தேசீயச் செல்வத்தின் கூட்டாளி. ஆகவே அவனுக்கு உடம்பு அசௌகரியத்தின் போது பணம் கொடுப்பது தர்மம் அல்ல; வாங்குவது அவன் உரிமை. சர்க்கார் செலவில் தொழிலாளிகளுக்காக இன்ஷ்யூரன்ஸ் செய்யப்படுவதாலும், ஏராளமான ஆரோக்கிய நிலையங்களை சர்க்கார் ஏற்படுத்தியிருப்பதாலும் இந்த உரிமை பத்திரமாகிறது.

இன்னும், நகரங்களிலும், நாடுகளிலும் வசிக்கும் ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சமூக இன்ஷ்யூரன்ஸை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிருர்கள். 1935-ம் வருஷத்தில் சர்க்கார் 65,000 தள்ளாத குடியானவர்களுக்கு எட்டு மிலியன் ரூபில்கள் (ரஷ்ய நாணயம்) செலவழித்திருக்கிருர்கள். ஏழைகளுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் நிதி வரவர வளர்ந்து வருகிறது. இந்தப் பிரிவின் கீழ் வராத பெண்கள் முதலியவர்களை சமூக நல மந்திரி பாதுகாக்கிருர்.


ஒவ்வொரு பிரஜைக்கும் **கல்வி பெற உரிமை உண்டு.** கட்டாய ஆரம்பக் கல்வியும் 'சம்பளமில்லாமல் உயர்தரக் கல்வியும்' அடையவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியின்போது இலவசமாகச் சிற்றுண்டியும், புஸ்தக வசதிகளும், பண சகாயமும் உண்டு. உயர்தரக் கலா சாலைகளில் ஏராளமான மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுக்கிருர்கள். 1936-ம் வருஷத்தில் சுமார் 5 கோடி ஜனங்கள் அதாவது தேசத்தில் கால் வாசி ஜனத்தொகை படித்தவர்கள். சமீப காலத்திய செய்திகளைக் கேட்கும் போது ரஷ்யாவில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்கள் படித்தவர்கள் என்று தெரிகிறது.

சட்டத்தின் முன்னல் **எல்லோரும் சமம்** என்பதை இரண்டு பிரிவுகள் வற்புறுத்துகின்றன. பெண்மணிகள் சரிநிகர் சமதை அடைந்திருக்கிருர்கள். எல்லா வேலைகளுக்கும் அவர்கள் லாயக்காகிருர்கள். ஏராளமான பிரசவ விடுதிகளையும் தாயார்களுக்கான இன்ஷ்யூரன்ஸ் வசதிகளையும் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிருர்கள். மதங்கள் வகுப்புகள் பாகுபாடன்னியில் எல்லோருக்கும் சம உரிமை என்பது ஒரு முக்கியமான பிரிவு. இதை '**அசைக்க முடியாத சட்டம்**' என்று கூறுகிருர்கள். **வகுப்புப் பூசலைக் கிளப்பிவிட்டு வேற்றுமை உணர்ச்சிகளைக் கிளப்பிவிடுபவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.** 123-ம் பிரிவின்கீழ் "தேச வகுப்பு தனித்தன்மைக்"காக பிரசாரம் செய்வது ஒரு கிரிமினல் குற்றம்.

பேச்சு, பிரஸ், கூட்டம் இந்த உரிமைகளும் சட்டத்தின் கீழ் உண்டு. தொழிலாளிகளுக்கு காகிதம், பிரஸ், கட்டிடம், கடிதப் போக்குவரத்து அநுகூலம் இவைகளெல்லாம் கொடுத்து இந்த உரிமையைப் பத்திரப் படுத்தியிருக்கிருர்கள்.

ஆனல் இந்த சுயேச்சை "தொழிலாளர் நலனுக்கும், ஸோஷலிஸ்ட் சமூகத்திற்கும் பொருத்தமா யிருக்கவேண்டும்" என்பது ஒரு உபப்பிரிவு. ஏனென்ருல் இந்த சுயேச்சையை வைத்துக் கொண்டு முதலாளித்துவத்தை பிரசாரம் செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வாறு உபப்பிரிவு ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிருர்கள்.

'பொதுஸ்தாபனங்களில் சேரும் உரிமை' மக்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இதனல் ஜனங்களை மிகவும் உத்சாகமாக அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்திருக்கிருர்கள். **சர்க்கார் வக்கீல் உத்திரவில்லாமலோ நீதிமன்றத்தின் உத்திர வில்லாமலோ ஒரு பிரஜையையும் அரஸ்ட் செய்ய உரிமை இல்லை. வெளிநாட்டில் கஷ்டப்பட்டு துரத்தப்பட்ட மக்களுக்கும் ரஷ்யாவில் வாழ உரிமை உண்டு.**



'மாயா மசீந்திரா'வில் ஒரு காட்சி